# லண்டன் முரசு

Vol. 4 LONDON MURASU 15th DECEMBER 1973 No. 9



செயின்ட் பால்ஸ் கதீட்ரல் - லண்டன்



## CEYLON TEA CENTRE

We operate Restaurants in the following centres:-

22 Regent Street, Piccadilly Circus, London, S.W.1.
129 Buchanan Street, Glasgow, C.1.
Peter House, Oxford Street, Manchester, M1 5AN.
36 The Headrow, Leeds 1.
22 Priory Ringway, Birmingham 4.
Eastgate House, Paris Street, Exeter.

Why not bring your friends for lunch, afternoon tea, or a quick cup?

Pure Ceylon Teas are ideal presents any time of the year and a selection including the following are available in all the foyers.

CEYLON

Four Fine Ceylon Teas - ¼ lb cartons

Dimbulla, Uva, Kandy & Nuwara Eliya
Composite Gift Pack of all four i.e. 1 lb nett

½ lb caddy - attractive Kandyan Dancer design
36 Tea Bag caddy - similar design as for ½ lb.
1 lb and 3 lb miniature chests
18 Tea Bag cartons

## AIR CARGO & TRAVEL PLANNERS LTD.

SPECIALISTS IN LOW COST JET TRAVEL

TO: COLOMBO
SINGAPORE
KUALALUMPUR
DJARKATA



INSTANT CREDIT

FIVE FLIGHTS PER WEEK

**10 KINGLY STREET LONDON W 1**

**Tel ; 01 734 4991/9076**

**Tube; Oxford Circus**

# லண்டன் முரசு

தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை

— பாரதிதாசன்

முரசு 4 மார்கழி திருவள்ளுவர் ஆண்டு 2004, டிசம்பர் 15 1973 ஒலி 9


| | | | |
|---|---|---|---|
| ஆசிரியருரை | 2 | முன்னேறும் அறிவியலில் | 12 |
| தாய்நாடுகளின் செய்திகள் | 3 | நிழற்படத்தில் செய்திகள் | 14 |
| சிதறிய செய்திகள் | 5 | குருக்ஷேத்திரம் | 17 |
| நம்மைச் சுற்றிய உலகம் | 6 | நாடிவரும் கொவற-டெக் | 20 |
| நத்தார் செய்தி | 7 | அன்புள்ள ஆசிரியருக்கு | 22 |
| சிறப்புநாட்குறிப்பு | 7 | FINAL EXAMS | 24 |
| மேற்குநாடுகளின் செய்திகள் | 9 | NEWSGRAM | 25 |
| கவிதை | 11 | CLASSIFIED ADVERTISEMENTS | 28 |



கௌரவ பொறுப்பாசிரியர்

ச.ம. சதானந்தன் B.Sc., (Econ) (Lond).

கௌரவ சிறப்பாசிரியர்கள்

திருமதி சாரதா நம்பி ஆரூரன் M.A.

ஸ்ரீ.வேங்கடேசன் B.Sc., A.I.C.

கௌரவ ஓவியர்கள்

கோ. ஜம்பு

பக்கீர்

கௌரவ உதவியாளர் குழு

ஜே.வீ. ஆனந்தராஜா

க. ஜெகதீஸ்வரன்

சி. சிவசோதி

ஜெ. சிவாஜி B.Sc. (Eng)

மீ. சுப்பாராஜ்

எம்.டி. விஜயேந்திரன்

கௌரவ நிருபர் / பிரதிநிதிகள்

தமிழ்நாடு டி. செல்வராஜன்

கேரளம் எஸ். எஸ். மணி B.Com.

மைசூர் ஆர். கண்ணன் B.A., B.O.L., B.T.

மதுரை ஆ. ஞானசேகரன் M.Sc.

மலேசியா பொ. பாலகோபால் B.A., B.L.

பிரான்சு ஜமாலுதீன் M.P.E.

மான்செஸ்டர் ஆர். எல். சிவம்

மேற்கு நாடுகளின் முதன்முதல் தமிழ்த் திங்கள் ஏடு

இலாப நோக்கின்றி நடத்தப்படும் பிரசுரம்

லண்டன் முரசு பிரசுரத்தால் வெளியிடப்பட்டது

# பொருள்வளம் பெருக்குவோம்

தமிழ் ஈழத்தின் தொழில் வளத்தைப் பெருக்கவும், தமிழ் இளைஞர்களுக்கு கூடியளவில் வேலைவாய்ப்பை அளிக்கவுமான ஒரு பொருளாதாரத் திட்டத்தினை உருவருக்கி வருகின்றனர் ஈழத்தின் தமிழர் கூட்டணியினர் . இருபது ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையில் தமிழர்களிடம் அரசியல் விழிப்புணர்ச்சியைக் கொண்டுவருவதில் மும்முரமாக இயங்கி வந்த தமிழரசுக் கட்சியினர் இந்தக்காலங்கடந்த வேளையிலாவது பொருளாதார விழிப்புணர்ச்சி பெற்றிருப்பதைத் தமிழர்கள் வரவேற்க வேண்டியது தான்.

எந்த ஒரு சமூகத்தினரோ, நாட்டினரோ தற்கால உலகில் சுயேச்சையாக வாழவேண்டுமானல் செல்வமிகு சமுகமாக, நாடாக இருத்தலின் அவசியத்தை நாம் அறிவோம். பொருளாதார விருத்தியும் , சுயதேவைப் பூர்த்தியும் ஈழத் தமிழக மக்களின் பல இன்னல்களைத் தீர்க்க உதவுமென்பதில் ஐயமில்லை . தொழில்வளத்தை, பொருள்வளத்தை பெருக்கும் பணியில் ஈடுபடத் தொடங்கியுள்ள தமிழர் கூட்டணியினருக்கு முரசு சில யோசனைகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் பூர்வீகப் பகுதிகளான மாங்குளம், வவுனியா, மதவாச்சி, மன்னர், புத்தளம்,முல்லைத் தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, பொத்துவில் பகுதிகள் யாவும் பெரும்பான்மையாக சனத்தொகை அடர்த்தியற்ற, குறைந்தளவில் பயிர் செய்யப்பட்ட பகுதிகளாக விளங்குகின்றன. திட்டமிட்டாற் போல் இவை படிப்படியாக பறிபோய்க் கொண்டிருக்கின்றன. அதே வேளையில் 300 சதுர மைல்களைக் கொண்ட யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குள் லட்சக் கணக்கில் நம்தமிழர்கள் முடங்கிக் கிடக்கின்ருர்கள். பொருளாதார விருத்தி செய்யும் நோக்கத்தில் குடாநாட்டிலுள்ள தமிழர்களில் பாதிக்கு மேற்பட்டவர்களைப் பரந்து கிடக்கும் தமிழ்ப் பகுதிகளில் குடியேறும்படியான முயற்சியில் ஈடுபடவேண்டும் தமிழர் கூட்டணியினர்.

ஈழத்தமிழகத்திற்கு வெளியே பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் குடியேறி வாழ்கின்ருர்கள். மேற்குநாடுகளிலும், மலேசிய, சிங்கை, ஆபிரிக்க நாடுகளில் வாழ்ந்துவரும் தமிழர்கள் நாடுவிட்டு நாடுபோய் வாழினும் பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் வசதியுடன் இருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒரு செய்தியாகும். ஈழத்தமிழ்ப் பகுதிகளில் முறையான திட்டமிட்ட நிறுவனங்களை ஏற்படுத்தி அவற்றில் பங்கு கொள்ள வெளிநாடு வாழ் தமிழர்கள் நிச்சயம் முன்வருவார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனல் முறையாகத் திட்டமிடப்பட்ட நிலையான நிறுவனங்களையும் திட்டங்களையும் தமிழ்க் கூட்டணியினரின் பொருளாதாரக் குழுவினர் செயல்படுத்தினல் தான் இந்தப் பங்கை வெளிநாட்டுத் தமிழர்கள் கொடுக்க முன்வருவார்கள்.

தமிழர்களின் உரிமைக்காகப் போராடும் தமிழர் கூட்டணியினர் இனியாவது பொருளாதார வளத்தினைப் பற்றியும், குடாநாட்டை விட்டுத் தமிழர் வெளியேறும் திட்டத்தினைப் பற்றியும் திட்டமிட்டு செயலாற்றின் — அதுவே அவர்கள் தமிழர்களுக்கு செய்யும் அரும் பெருந் தொண்டாக நாம் கருதுவோம். எமது எதிர்கால காலச் சந்ததியினருக்கு நாம் செய்யவேண்டிய மிக முக்கிய கடமைகள் இவை இரண்டும்: குடா நாட்டை விட்டு வெளியேறுவது. வெளிநாட்டுத் தமிழர்களின் கூட்டுப் பங்கிற்கு வழி வகுப்பது.

# தமிழறிஞர்களின் சிந்தனைக்கு. . .!

தமிழ் மொழியின் வளத்தினையும் பெருமைதனையும் ஆய்ந்து வரும் நான்காம் தமிழ்ச் சங்கமாம் அனைத்துலக தமிழாராய்ச்சிக் கழகத்தின் நான்காம் பேரவை, ஈழத் தமிழகத்தின் வரலாற்றுப் பெருமை கொண்ட யாழ்ப்பாணத் தலைநகரில் எதிர்வரும் தைத்திங்கள் முதலாம் வாரமன்று கூடவிருக்கின்றது.கோலாலம்பூரிலும், சென்னையிலும், பாரிசிலும் ஏற்கனவே கூடி நம்மொழி பற்றிய கல்வெட்டுக்களையும் அந்நிய நாட்டு தொடர்புகளையும் அனைத்து இலக்கியங்களையும் ஆய்ந்து கட்டுரைகளை சமர்ப்பித்திருக்கிருர்கள் தமிழறிஞர்கள் . சுருங்கக் கூறின் தமிழ் மொழியின் பண்டைய பெருமைகளையே ஆராய்ந்து வந்திருக்கிருர்கள். மாறிவரும் புத்துலகின் அறிவியல் கண்ணேட்டம் விரிவடைந்து வரும்போது அதன் தொடர்புகளுக்கான தேவைகளும் அதிகரித்து வருகின்றன. தமது வளத்தினைக் காப்பதற்காக ஏனைய உலகமொழிகள் பலவும் புதிய.புதிய கலைச்சொற்களை உருவாக்கி தம்முடன் இணைத்துக்கொண்டு வருகின்றன. பிரச்சனையான இக்கால கட்டத்தில் நாம் வெறும் பழம் பெருமைகளைப் பேசுவதிலேயே காலத்தினையும், தமிழறிவாளர்களின் திறமைகளையும் விரயம் செய்வது தகுந்ததல்ல என முரசு கருதுகின்றது. விஞ்ஞானத்துக்கும் தொழில் நுணுக்கத்துக்கமான புதிய கலைச் சொற்களும்(Science & Technology in Tamil ) நீட்டெழுத்துக்கான தமிழ் முறைகளும் (Fast writing in Tamil ) தமிழில் உருவாகுதல் மட்டுமல்ல தமிழ் மொழியின் இலகு நடையும்(Simplifica--tion in Tamil ) கலைச் சொற்களையும் பேச்சுக்களையும் இணைத்தலுக்கான முறைகளும் (Stand --ardisation in Tamil Language ) உருவாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை முரசு தமிழ் அறிஞர்கள் முன்னிலையில் வைக்கின்றது. தமிழ் மொழியை வளம் பெறச் செய்யும் ஆக்கபூர்வமான முயற்சிகளில் நம் தமிழறிஞர்கள் இனியும் வாளாவிருக்கக் கூடாது என்றும் முரசு வேண்டிக் கொள்கிறது.

வாழிய தமிழ் வாழ்க தமிழினம்

# தாய் நாடுகளின் செய்திகள்

## 4வது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு திட்டமிட்டபடி நடைபெறும்.

4வது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு திட்டமிட்டபடி 1974ம் ஆண்டு ஜனவரி மாதம் 3ந் தேதி தொடக்கம் 9ந் தேதி வரை யாழ்ப்பாணத்தில் நடைபெறும். மாநாடு பிற்போடப்பட்டுள்ளதென்றும் ஆராய்ச்சி மன்றத்துடன் தொடர்புடைய பலர் மன்றத்திலிருந்து பதவிகளைத் துறந்திருப்பதாகவும் தப்பான தகவல்கள் செய்தித் தாள்களிலும் தனிப்பட்டவர்களாலும் வெளியிடப்பட்டு வருவதால் இந்த அறிக்கையை விடுக்கின்றேன், என்று தெரிவித்தார் அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளைத் தலைவர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள். மேலும் அவர் விடுத்துள்ள செய்தியாவது: "காலரா நோய் காரணமாகவோ, வேறு எக்காரணம் பற்றியோ மாநாட்டினைப் பிற்போட வேண்டாமென அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தோடு தொடர்புடைய பல வெளிநாட்டு அறிஞர்கள் எமக்குக் கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். இவ்வாறு பின்போடுவது ஆராய்ச்சி மாநாட்டிற்கு வருவதற்கு ஒழுங்கு செய்துள்ள வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்களுக்கு பிரச்சினைகளை உண்டாக்கும் என்றும், இலங்கை வாழ் தமிழர் பற்றிய நல்லபிப்பிராயத்திற்குப் பங்கம் விளைக்கும் என்றும் ஆராய்ச்சி மாநாடுகளின் தொடர்ச்சியைக் குலைக்குமென்றும் குறிப்பிட்டுள்ளார்கள். இதுவரை எழுபதுக்கும் மேற்பட்ட வெளிநாட்டறிஞர்கள் மாநாட்டிற்கு வருவதாக அறிவித்திருக்கிறார்கள். இன்னும் பலர் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதுவரை ஐம்பது ஆராய்ச்சிக் கட்டுரைகள் கிடைத்துள்ளன. பலர் இன்னும் சில நாட்களில் அனுப்புவதாக எழுதியுள்ளார்கள். இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, ஜப்பான், ஹங்கேரி, ஆஸ்திரேலியா, இத்தாலி, மலேசியா, சுவீடன், இந்தியா போன்ற நாடுகளிலிருந்து ஆராய்ச்சியாளர் கலந்து கொள்ளும் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடாக இது திகழும். இவ்வாராய்ச்சி மாநாட்டிற் பொது மக்களுக்கெனச் சிறப்புச் சொற்பொழிவுகளும் பொருட்காட்சியும் இடம் பெறும். இவற்றிற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டு அறிஞர்களை வரவேற்று உபசரிப்பதற்குப் பல குடும்பங்கள் முன் வந்துள்ளன. மாநாட்டினைச் சிறப்பாக நடாத்துவதற்கு யாவரதும் ஒத்துழைப்பை வேண்டுகின்றோம்."

## சென்னை மாநகராட்சி மன்றம் கலைக்கப்பட்டது.

சென்னை மாநகராட்சி மன்றம் (கார்ப்பரேஷன்) கலைக்கப்பட்டுள்ளதாக சட்ட மன்றத்தில் முதல்வர் கருணாநிதி தெரிவித்தார். சென்னை மாநகராட்சியின் மின்சார இலாகாவில் நடந்து வந்த லஞ்ச முறைகேடுகளினால் சுமார் 8 கோடி ரூபாய் கையாடல் செய்யப்பட்டுள்ளதென தமிழகப் போலீசார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். மோசடியில் மாநகராட்சி மின்சார இலாகா, கணக்கு இலாகா, பண விநியோக இலாகா ஆகிய மூன்றும் சம்பந்தப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. தலைமை மின்சார பொறியாளர் உட்பட பல அதிகாரிகள் கைதாகியுள்ளனர்.

## மாதோட்டத்தின் மாணிக்கம் அழகக்கோன் அமரரானார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியத் தலைவர்களில் ஒருவரும், மன்னாரின் பாராளுமன்ற உறுப்பினருமாக பதினெட்டு ஆண்டுகளாக இருந்து வழிகாட்டிய மாதோட்டத்தின் மாணிக்கம் திரு. வீ.ஏ. அழகக்கோன் நவம்பர் 25ந் தேதியன்று அமரரானார். இவரது பூதவுடல் 28ந் தேதியன்று மன்னார் பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. மன்னார் பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படுவதற்காக அமரர் அழகக்கோனின் பூதவுடல் ஊர்வலமாக எடுத்து வரப்படுவதற்கு முன்னர் காலை 9 மணியிலிருந்து மாலை 3 மணி வரை பொதுமக்களின் அஞ்சலிக்காக மன்னார் பட்டின சபை மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்தபோது தமிழ் ஈழத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மன்னாருக்கு வந்து குவிந்திருந்த ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் வழிந்தோடும் கண்ணீருடன் அமரருக்குத் தங்கள் இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். இறக்கும் வரை கொள்கை மாறாத இலட்சியவாதியாக வாழ்ந்த அமரர் அழகக்கோனின் பூதவுடல் தமிழரசுக் கட்சியின் மூவர்ணக் கொடியினால் போர்த்தப்பட்டிருந்தது.

தமிழரசுக் கட்சியின் பா.உ.க்களும், முக்கிய பிரமுகர்களும் தலைவர்களும் அமரராகிவிட்ட தங்கள் நெருங்கிய சகாவான அழகக்கோனின் பூதவுடல் வைக்கப்பட்டிருந்த இடத்தில் கவலை தோய்ந்த முகத்தினராய் அமர்ந்திருக்கக் காணப்பட்டனர். மன்னார் மாவட்டம் முழுவதும் கடைகள் யாவும் பூட்டப்பட்டு, கறுப்பு வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டு பூரண துக்கம் அனுட்டிக்கப்பட்டது.

## கோவை செழியன் தி.மு.க.விலிருந்து விலகினார்.

தி.மு.க.விலிருந்து தாற்காலிகமாகத் தடை செய்யப்பட்டுள்ளதாக திரு. நெடுஞ்செழியன் அறிவித்ததைத் தொடர்ந்து திரு. கோவை செழியன் தி.மு.க.விலிருந்து விலகியுள்ளார். தமிழ் நாடு முதல்வரும் கழகத் தலைவரும் ஆன கருணாநிதி உண்மையிலேயே பிரிவினைவாதி என்பதையும், மாநில சுயாட்சிப் போர்வையில் பிரிவினைப் பிரசாரம் செய்கின்றார் என்பதை உணர்ந்ததாலேயே தான் தி.மு.க.விலிருந்து விலகியதாக திரு. செழியன் கூறியுள்ளார். அ.தி.மு.கழகத்தில் திரு. செழியன் இப்போது சேர்ந்து விட்டார்.

## திருச்சி, பாளையங்கோட்டை சம்பவங்கள் விசாரணை அறிக்கை வெளியீடு.

ஏறத்தாழ ஓராண்டுக்கு முன்பு மாணவர்கள் கிளர்ச்சி செய்ததையொட்டி போலீசார் வன்முறையைப் பயன்படுத்தியதைத் தொடர்ந்து அரசு நிறுவிய விசாரணைக் குழு தனது அறிக்கையை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் போலீசார் செயல் வன்மையான கண்டனத்துக்குள்ளாகியிருக்கிறது. திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி கிளோவ் ஹாஸ்டலில் போலீசார் நுழைந்ததற்கு நியாயமே இல்லையென்றும் போலீசார் கையாண்ட வன்முறை வரம்பு கடந்தது என்று அந்த அறிக்கையில் குறிக்கப்பட்டுள்ளது. அவ்வமயம் பதவியிலிருந்த போலீஸ் உதவி அதிகாரியும் ரெவினியூ டிவிஷனல் அதிகாரியும் தாற்காலிகமாகப் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். பாளையங்கோட்டையில் பேராசிரியர் ஒருவரும் அவரது தம்பிகள் இருவரும் தாக்கப்பட்டதைப் பற்றிக் குறிப்பிகையில் அவர்கள் அநியாயமாக கொரேமாகத் தாக்கப்பட்டனர் என்றும் இது நியாயமற்றதும் கண்டிக்கத்தக்கதும் ஆகும் என்றும் விசாரணைக் குழு குறிப்பிட்டுள்ளது.

இந்த விசாரணை அறிக்கையைத் தொடர்ந்து தமிழக அரசு பதவி விலக வேண்டும் எனக் கோரி தமிழக சட்டமன்றத்தில் நான்கு முக்கிய எதிர்க் கட்சிகள் ஒரு அவசரப் பிரேரணை கொண்டு வந்தார்கள்.

## புதுவை அரவிந்தர் ஆசிரம அன்னை மறைவு.

புதுவையின் புகழ் பெற்ற அரவிந்தர் ஆசிரமத்தின் அன்னை சென்ற மாதம் 22ந்தேதி மாரடைப்பால் காலமானார். இவருக்கு வயது 96. கடந்த ஆறு மாத காலமாக நோய்வாய்ப்பட்டிருந்தார் அன்னை. அவரது பூதவுடல் அரவிந்தரது சமாதியருகேயே அடக்கம் செய்யப்பட்டது. புதுவை மாநில அரசு இவரது மறைவை அடுத்து விடுமுறை விடுத்திருந்தது. இந்திய ஜனாதிபதியும் பிரதமரும் அனுதாபச் செய்திகள் அனுப்பியிருந்தனர்.

## இலங்கையில் இந்தியப் புத்தக இறக்குமதி வெட்டுக்கு கண்டனம்..

இந்தியப் புத்தகங்கள், சஞ்சிகைகள் இறக்குமதியை இலங்கை அரசு கடுமையாக வெட்டிக் குறைக்குமெனில் அது அந்நாட்டில் வாழும் தமிழ் சிறுபான்மை மக்களுடன் அது மேலும் விரோதத்தையே சம்பாதித்துக்கொள்ளும் — இவ்வாறு பம்பாயிலிருந்து வெளியாகும் டைம்ஸ் ஆஃப் இந்தியா பத்திரிகை தனது தலையங்கமொன்றில் கடுமையாக விமரிசித்து கண்டனம் தெரிவித்துள்ளது. அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளதாவது: தமிழ்க்கலை, இலக்கிய சஞ்சிகைகள் இலங்கைத் தமிழர்களால் விரும்பிப் படிக்கப்படுகின்றன. இப்போதே அதனைப் பெருமளவில் அரசு வெட்டி விட்டது. இனியும் வெட்டு விழுமானால் தங்கள் கலாசார வளர்ச்சிக்கு உதவுகின்ற சக்திகளுக்கு தடை போடுவதன் மூலம் இலங்கை அரசு தங்கள் கலாசாரத்தை வேரறுக்க உறுதி கொண்டுள்ளது என்ற ஈழத்தமிழர் அச்சம் உறுதிப்படும். ஏற்கனவே தமிழர்கள் அமைதியிழந்துள்ளார்கள். உணவு உற்பத்தியில் அரசு முனைந்துள்ளது. இச்சமயத்தில் புதுப்புது பிரச்சினைகளைத் தோற்றுவிப்பது புத்திசாலித்தனமாகாது. இந்தியப் பிரசுரங்களை வாசிக்கும் உரிமையைத் தமிழரிடமிருந்து பறிப்பதற்கு பதிலாக இலங்கை அரசு உள்நாட்டில் தமிழ்ப் புத்தகம் சஞ்சிகை பிரசுரிப்பாளர்களுக்கு ஊக்கம் தந்து அப்பத்திரிகைகளின் தரத்தை உயர்த்தி இந்தியப் பத்திரிகைகளை வாசிக்க விரும்பும் ஆர்வத்தை இயற்கையாகத் தணிக்க முயல வேண்டும்.

## கடலூரில் ஒரு உரத் தொழிற்சாலை

தமிழக அரசாங்கத்தால் கடலூரில் ஒரு பெரிய உரத் தொழிற்சாலை அமைக்கப்படவிருக்கிறது. இச்செய்தியை அண்மையில் தூத்துக்குடியில் தெரிவித்த தமிழக முதல்வர் இத்தொழிற்சாலை கூட்டுறவுத் துறையில் அமையும் என்று குறிப்பிட்டார். இதற்கான முதலீடு ரூ.140 கோடி. இந்தத் தொழிற்சாலை அமைக்கப்பட மத்திய அரசின் ஒப்புதல் எதிர் நோக்கப்படுகிறதாம். இந்தத் திட்டத்தின் உத்தேச ஆலை நாளொன்றுக்கு 4000 டன் உரம் உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பாண்டிச்சேரி மாநிலம் பற்றி ஃபருக் மரைக்காயர்.

பாண்டிச்சேரி தனி மாநிலமாக இருக்க வேண்டும் என்று முதலமைச்சர் ஃபருக் மரைக்காயர் அண்மையில் சென்னையில் தெரிவித்தார். பாண்டிச்சேரி மாநிலம் தமிழ் நாட்டுடன் இணைவது அங்குள்ள எந்த அரசியல் கட்சிக்கும் உடன்பாடுடையது அல்லவென்று குறிப்பிட்டார் அவர். மேலும் பேசுகையில் பாண்டிச்சேரியிலுள்ள பிரஞ்சு கலாசாரத்தையும் மொழியையும் பாதுகாக்க அரசு தக்க நடவடிக்கை எடுத்து வந்த போதிலும் பிரஞ்சு மொழி பயில ஆர்வத்துடன் முன்வருபவர்கள் வெகுவாகக் குறைந்துவிட்டனர் என்றார் அவர்.

## டில்லிப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் தமிழ் ஈழம் வருகை.

டில்லிப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியரான டாக்டர் சாலை இளந்திரையன் அவர்களும் அவருடைய துணைவியாரும் தில்லித் திருவேங்கடவன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியையுமான டாக்டர் சாலினி இளந்திரையன் அவர்களும் இம்மாத இறுதியில் தமிழ் ஈழம் வரவிருக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் நடைபெறவிருக்கும் 4வது உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொள்ளுமுகமாக அவர்கள் இலங்கை வருகிறார்கள். இதற்கு முன்பு 1962ல் இவர்கள் ஈழத்திற்கு வருகை தந்து வேலணைத் திருக்குறள் மாநாட்டிலும் பல எழுத்தாளர் சங்க நிகழ்ச்சிகளிலும் பங்கு கொண்டு அறிஞர்களோடு அளவளாவினார்கள். ஈழ நாட்டு தமிழிலக்கியத்தை நன்கு அறிந்து கொள்வதிலும், அதைத் தாய்த் தமிழகத்துக்கும் ஏனைய இடங்களுக்கும் எடுத்துச் செல்வதிலும் பேரார்வம் காட்டியவர்கள் இத்தம்பதியர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிதறிய செய்திகள்

* * * அண்மையில் லண்டன் வந்து போன தமிழக சட்ட மன்ற உதவி சபாநாயகர் திரு.பெ.சீனிவாசனைக் கத்தியால் குத்த முயன்றதாக அப்ரஹாம் என்ற இளைஞர் விருது நகரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

* * * தமிழ்ப் பேராசிரியர் திரு. சொக்கலிங்கம் எழுதியுள்ள "சோவியத் நாட்டில் நான் கண்டதும் கேட்டதும்" என்ற நூல் ரஷ்ய அரசாங்கத்தின் நேரு பரிசைப் பெற்றுள்ளது.

* * * பாண்டிச்சேரி அருகில் உருவாகி வரும் அனைத்து நாடுகள் நகரமான ஆரோவில் நகரில் தமிழக அரசின் சார்பில் பத்து லட்ச ரூபாய் செலவில் தமிழ்நாடு அரங்கு ஒன்று கட்டப்படும். இதற்கான அடிக்கல்லை முதல்வர் அண்மையில் நாட்டி வைத்தார்.

* * * இலங்கை மூளாயைச் சேர்ந்த இரண்டு தமிழ் இளைஞர்கள் சென்ற மாதம் 16ம் தேதியன்று நள்ளிரவில் போலீசாரால் கைது செய்யப்பட்டு கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இவர்கள் தேசியக் கொடியை எரித்ததாக முன்பு தொடரப்பட்ட வழக்கு மறுநாள் விசாரணைக்கு வரவிருந்தது குறிப்பிடத்தக்கது.

* * * இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைநகரை மாற்றுவதை எதிர்த்து நகர வியாபாரிகள் கதவடைப்புச் செய்தனர்.

* * * தமிழ் நாட்டில் கப்பற் போக்குவரத்துக்காக ஒரு புதிய கூட்டுத்தாபனம் தொடங்கப்பட அனுமதியையும் ஒப்புதலையும் அளித்துள்ளது இந்திய மத்திய அரசுத் திட்டக் கமிஷன்.

* * * புதுவை மாநிலம் தமிழகத்தோடு இணைய வேண்டும் என்ற கோரிக்கையோ கொள்கையோ திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கிடையாது என்று முதலமைச்சர் கருணாநிதி அண்மையில் கூறியிருக்கிறார்.

* * * திருப்பதி ஏழுமலையானுக்கு 75 லட்ச ரூபாய்ச் செலவில் வைரக்கிரீடம் தயாரிக்கப்படுகிறது.

* * * இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர வேண்டுமென்றால் இலங்கையில் தமிழர்களுக்காகத் தனித் தமிழ்நாடு ஏற்படுவதைத் தவிர வேறு வழியில்லை என்று சென்னையில் கருத்து தெரிவித்துள்ளார் மலேசிய நாட்டின் ஈப்போ நகராட்சித் தலைவர் திரு.எஸ்.டி.சீனிவாசகம் அவர்கள்.

* * * ஃபார்வர்ட் பிளாக் கட்சித் தலைவர் முத்துராமலிங்கத் தேவருக்கு மதுரையில் சிலையெடுக்க நடிகர் திலகம் சிவாஜி கணேசன் பத்தாயிரம் ரூபாய் நன்கொடை அளித்துள்ளார்.

* * * ஆதி சங்கரர் உருவப் படத்தைத் தாங்கிய சிறப்பு அஞ்சல் தலையை இந்திய அரசு வெளியிடவிருக்கிறது.

* * * திருச்செந்தூர் தேவஸ்தானம் தனது வசமுள்ள நிதியிலிருந்து ஒரு மகப்பேறு மருத்துவ மனையும், கண் சிகிச்சை நிலையத்தையும் அமைக்கவிருக்கிறது.

* * * சென்னையில் சங்கீத வித்வத் சபையின் 47வது சங்கீத மாநாடு இம்மாதம் 21ம் தேதி தொடங்கும் திருமதி பாலசரஸ்வதிக்கு அவ்வமயம் சங்கீத கலாநிதி என்ற விருது அளிக்கப்படும்.

* * * கடந்த ஜூன் மாதம் 29ம் தேதியன்று சுகாதார அமைச்சருக்கு எதிராக கறுப்புக் கொடி காட்டியதாக சில இளைஞர்கள் மேல் தொடரப்பட்ட வழக்கை இலங்கைப் போலீசாரே வாபஸ் பெற்றனர்.

* * * மதுரையில் ஒன்றரை லட்ச ரூபாய்க்கான ஒரு ரூபாய்க் கள்ள நோட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

* * * பாண்டிச் சேரி சட்டமன்றத் தேர்தல் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் நடைபெறும். இரண்டரை லட்சம் பேர் வாக்களிப்பார்கள்.

* * * அஞ்சலி தேவியால் தயாரிக்கப்பட்டுள்ள பக்த துக்காராம் என்ற தமிழ்ப் படம் மராட்டி மொழியில் மொழி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. சிவாஜி கணேசன் மன்னன் சிவாஜியாகத் தோன்றும் இப்படத்தில் அவரது நடிப்பைக் கண்டு அசந்து போன பிரபல மராட்டிய எழுத்தாளர் ஜி.டி. மாட்குல்கர் "சிவாஜியாக நடிக்க கணேசனைப் போல் யாராலும் முடியாது" என்று பாராட்டியிருக்கிறார்.

* * * கொழும்பு வடக்கில் நடை பெற்ற தேர்தலின் போது அரசாங்கத்துக்கும் ஐக்கிய முன்னணிக்கும் இருந்த ஆதரவு 15 சதவிகிதத்துக்கும் கீழாகக் குறைந்துள்ளதாம்.

* * * தொழில் இணைக்காரியாலயங்களில் பதிவு செய்திருக்கும் 4,48,716 வேலையில்லா இளைஞர்களையும் யுவதிகளையும் விவசாயத்தில் ஈடுபடுத்த இலங்கை காணி விவசாய அமைச்சு உத்தேசித்துள்ளது. தொழிற்பயிற்சிபெற்றவர்களையும் பெறாதவர்களையும் விவசாயப் போராட்டத்தில் ஈடுபடுத்தி பசுமைப் புரட்சி விளைக்கப் போகிறதாம் இலங்கை அரசு.

* * * தமிழக வலது கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. எம்.கல்யாணசுந்தரம் கீல் வாதத் திற்காக (ருமாடிக் பெயின்) கோவையில் ஆயுர்வேத சிகிச்சை பெற்று வருகிறார்.

* * * தமிழர்களுக்கு தனிநாடு கேட்கும் திரு.ஈ.வே.ரா.பெரியாரை தமிழக முதல்வர் திரு.மு.கருணாநிதி சந்திக்கவிருக்கிறார். ஈ.வே.ராவை தி.மு.க. ஆதரிக்கிறது என்ற பாரதப் பிரதமரின் குற்றச்சாட்டை மறுத்த தமிழக முதல்வர் விடுத்த அறிக்கையிலேயே இச் செய்தியை கூறியிருக்கிறார்.

# நம்மைச் சுற்றிய உலகம்



xxx ஆஸ்திரேலியாவின் வடக்கே உள்ள நியூ கினி ,பாபோவா தீவுப்பகுதிகள் இம்மாதம் முதல் ஆஸ்திரேலியாவின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு சுயாட்சி பெறுகின்றன. இத்தீவுகளின் மக்கட்தொகை எவ்வளவு தெரியுமா? 25 லட்சம்!!

xxx அதிபர் கென்னடி மறைந்து பத்தாண்டுகள் ஆகி விட்டன. அந்த சம்பவத்தில் சம்பந்தப்பட்டு விதவைகளாக ஆக்கப்பட்ட மூன்று பெண்களான ஜாக்குலேன் கென்னடி, மரீனா ஆஸ்வால்ட், மேரி டிப்பிட் ஆகியோர் இன்று மறுமணம் செய்து கொண்டு வாழ்கிறார்கள். தன் முன்னாள் கணவரின் பத்தாவது மரண நினைவு தினத்தன்று தன் பங்குக்கு ஒரு மலர் வளையத்தை அனுப்பினார் திருமதி ஜாக்குலேன் ஒநசிஸ்!

xxx இளவரசி ஆன் தளபதி மார்க் தம்பதிகளது திருமணப்பரிசுகளில் ஒன்பது இரண்டரை பென்னி அஞ்சல் தலைகளும் ஒரு தங்க நிறக் காகித உறை சுற்றப்பட்ட "சாக்லேட்"டும் இருந்ததாம்!

xxx எதிர்வரும் சில வாரங்களுக்குள் தென் ஆப்பிரிக்க அரசு 125 முதல் 135 டன்கள் வரையிலான தங்கக்கட்டிகளை உலகப் பொதுச் சந்தையில் விற்கப்போகிறதாம்.

xxx ரஷ்ய உளவு நிறுவனமான கே.ஜி.பி. யைப்பற்றி அமெரிக்க "ரீடர்ஸ் டைஜஸ்ட்" நிறுவனம் ஒரு புத்தகம் வெளியிடவிருக்கிறது. இதில் உலகின் பல பாகங்களிலும் ஊடுருவிக் கிடக்கும் ரஷ்ய உளவாளிகளின் பெயர்கள் அம்பலப்படுத்தப்படும்!

xxx கிரேக்க நாட்டின் முன்னாள் அரசி ஃப்ரெடிரிக்கா சென்னையில் இந்து மதக் கோட்பாடுகளைப்பற்றி படித்து வருகிறாராம். இவர் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராச்சாரியாரைச் சந்தித்திருக்கிறார்.

xxx கென்னடியின் மரணத்தைச் சூழ்ந்துள்ள மர்மம் இன்னும் விடுபட்டதாகத் தெரியவில்லை. கென்னடி அன்று திறந்த காரில் ஊர்வலம் வந்து கொண்டிருந்த போது அவருடனேயே வந்து கொண்டிருந்த, காவற்துறை ஆளான சேனி என்பவர் கூற்றுப்படி கென்னடி முகத்தில் குண்டுபட்டு இறந்தார். ஆனால் ஆஸ்வால்ட் ஒளிந்து சுட்ட இடம் கென்னடியின் முதுகுப்புறம் இருந்ததாம்!

xxx இளவரசி ஆன் அடுத்த ஆண்டு கிருஸ்துமஸ் விழாவுக்கு முன் ஒரு பெண் குழந்தையைப் பெற்றெடுப்பாராம்! இது தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த ஒரு மந்திரவாதியின் ஆரூடம்!! ஆன்—மார்க் தம்பதிகள் மொத்தம் மூன்று குழந்தைகளுக்கு பெற்றோர்களாக ஆவார்கள் என்றும் அவர் கூறினார்.

xxx ஆங்கில—பிரஞ்சு கூட்டுத் தயாரிப்பான "கன்கார்ட்" விமானத்துக்குப் புதிய தலைவலி எரி எண்ணெய். ஒரு பெரிய போயிங் 747 விமானத்தின் அளவுக்கு ஒரு குறிப்பிட்ட தூரம் செல்வதற்கு எண்ணெயை எரிக்கும் இந்த விமானம் போயிங் விமானத்தின் அளவில் நான்கில் ஒரு பங்கு அளவு பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடியது.

xxx அதிபர் கென்னடியின் மரணத்தைப் பற்றிய புதிய சந்தேகங்களைக் கிளப்பியுள்ளது "எக்ஸிகியூட்டிவ் ஆக்ஷன்" என்ற புதிய திரைப்படம். கென்னடி மறைந்த மூன்றாண்டுகளுக்குள் அந்த சம்பவத்தில் நேரிடையாகவோ மறைமுகமாகவோ சம்பந்தப்பட்ட 18 பேர்கள் கோரமாகக் கொலை செய்யப்பட்டதற்கு என்ன காரணம் என்று கேட்கிறது இந்தத் திரைப்படம்!!

xxx இத்தாலியில் உள்ள "ட்யூரின்" நகர வீதியில் சென்ற மாதம் பால் பெருக்கெடுத்து ஓடியது! பால் பண்ணைத் தொழிலாளர்கள் அரசு தங்கள் பிரச்சினைகளில் அக்கறை காட்டவில்லை என்று கண்டனம் தெரிவிக்க ட்யூரின் நகர வீதிகளில் மாடுகளையும் கோழிகளையும் விரட்டி விட்டு போக்குவரத்தை ஸ்தம்பிக்க வைத்தனர்! பெரிய கலங்களில் பாலைக் கொண்டு வந்து தெருவில் ஓட விட்டனர்!

xxx வாட்டர்கேட் விஷயத்தால் புகழ் பெற்றுவிட்ட "மின்னணு மூட்டைப் பூச்சிகள்" இப்போது புகலிடம் பெற்றுள்ள இடம் எது தெரியுமா?? பெண்களின் மார்க்கச்சை! ஆம்! அமெரிக்க விண்வெளி நிறுவனம் விண்வெளி வீராங்கனைகளை உருவாக்க அவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் போது அவர்களின் உடல் காட்டும் மாற்றங்களைப்பதிவு செய்யும் வண்ணம் இப் "பூச்சிகளை" அவர்களது உடைகளில் உலவ விட்டிருக்கிறது.

xxx "ஆர்க்கிமீடியஸ்" என்ற கிரேக்க விஞ்ஞானி கி.மு. 215—212க்குமிடையே ஒரு முறை ரோமானியக் கப்பல்களை சூரிய ஒளியைப் பிரதிபலிக்கச் செய்து எரித்தார் என்று கண்ட ஒரு வரலாற்றுக் குறிப்பினை உண்மை என நிரூபித்துள்ளார் இன்றைய கிரேக்க விஞ்ஞானி ஒருவர்! ஆர்க்கிமீடியஸைப்போல் சூரிய ஒளியைப் பிரதிபலிக்க வைத்து இவரும் ஒரு படகுக் கும்பலை எரித்தார்!

xxx ஆங்கிலேய மருத்துவ அறிஞர் கண்டுள்ள ஒரு கருத்தடை முறை வெற்றி கண்டால் பெண்கள் அரை மணி நேர அறுவை சிகிச்சைக்குப் பின் வீடு செல்லலாம். பிறகு தேவையானால் மறுபடியும் ஒரு அறுவை சிகிச்சைக்குப்பின் இதனை மாற்றி விடலாம்.

xxx ஸ்பெயின் நாட்டில் அண்மையில் பெய்த மழையின் அளவு 7 மணி நேரத்துக்கு 11 அங்குலம்..இதன் விளைவாக பெரிய தொழிற்சாலைகளும் வீடுகளும் அழிந்தன. மொத்த நஷ்டம் 1000 லட்சம் டாலர்கள்! செத்தவர்கள் 210 பேர்கள்! கணக்கில் வராது போனவர்கள் 150 பேர்கள்!

—தொகுப்பு: திருமலைப்பெருமான்

# லண்டன் வண.பிதாவின் நத்தார்ச் செய்தி

"இருளில் நடக்கிற மனிதர்கள் பெரிய ஒளியைக் கண்டார்கள்; அந்தகாரத்தில் இருக்கிறவர்கள் மேல் வெளிச்சம் பிரகாசித்தது." என இயேசுவின் பிறப்பையிட்டுத் திருமறை கூறுகின்றது. அவர் பிறந்து சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளின் பின்பும் இச்செய்தி நாம் வாழும் இவ்வுலகிற்குப் பொருத்தமாயிருக்கின்றதன்றோ!

அறிவு, கலை, விஞ்ஞானம் போன்ற பல துறைகளிலும் முன்னேறியுள்ள மனித சமுதாயம் அன்பிலும், பண்பிலும், அறத்திலும், வலிமையும் பொலிவும் குன்றிச் சீர்கெட்ட நிலையில் இருக்கின்றது. வான்வெளியைக்கடந்து நிலவின் தூசியை இவ்வுலகிற்குக் கொண்டுவந்த பெருஞ்சாதனை ஒரு புறம்; பல்லாயிரக்கணக்கான மக்கள் பசியால் வாடி வதங்கி உயிர் நீத்த துயரச் செய்தி மறுபுறம். உலகின் ஒரு புறம் மக்கள் செல்வச் செருக்குடன் வாழ, மறுபுறத்தில் பலர் வறுமையிலும் பிணியிலும் அமிழ்ந்து கிடக்கின்றனர். நாதன் பிறந்த நாட்டிலும், அயல் நாடுகளிலும் வெறுப்பும், பகைமையும், வஞ்சமும் கடும் போராய்த் தலைவிரித்தாடுகின்றன. அரசுகளின் மத்தியில் அடக்கு முறையும், வன்செயல்களும், ஊழல்களும் மலிந்து கிடக்கின்றன. இதன் விளைவாய் தம்மை ஆளும் அரசுகளில் அவநம்பிக்கை கொண்ட மக்களும் வன்செயல்களில் ஈடுபட, நாடுகளின் அமைதி சீர்குலைந்து வருகின்றது. இவ்வாறாய் பல வழிகளிலும் நாம் வாழும் காலம் இருளின் அந்தகாரத்தில் வாழும் காலமாய் இருந்து வருகின்றதன்றோ!

இந்நிலையில் இயேசுவின் பிறப்பு நற்செய்தி இன்றைய உலகிற்கு அவசரத் தேவையென்பதில் எவ்வித ஐயமுமில்லை. இயேசுவின் வழி அன்பு வழி. ஒவ்வொரு தனி மனிதனும், சமுதாயங்களும் தமது தீய வழிகளினின்று மனம்மாறி அன்பைப் பேணி வளர்த்துத் தன் அயலவன் நலத்தையும் தன் நலம் போலக் காத்தல் வேண்டும் என அவர் கற்பித்தார். பகைமை, வெறுப்பு, பொய் வாழ்க்கை ஆகியவற்றைக் கைவிட்டுப் பண்பையும், தூய்மையையும் வாழ்க்கைக் கணிகலன்களாய்ப் பூண வழி காட்டினார். தாமே அதற்கு ஏற்ற எடுத்துக் காட்டாய் வாழ்ந்து காட்டினார்.

சமயப் பற்றுக் குலைந்து வரும் இந்நாட்களில், இறை வழிபாட்டைக் கண்ணாய்க் காத்து வந்த தமிழ்ச் சமுதாயத்தின் வழி வந்த நாம், எம்மதத்தவராயினும், கடவுட் பற்றைப் போற்றி வளர்க்கவும், அன்பையும், அறத்தையும் நிலைநாட்டவும் முயல்வோமாக இயேசுவின் பிறப்பின் நற்செய்தியும், அவர் அன்பும் நம்மையும் இவ்வுலகையும் நல்வழிப்படுத்த வேண்டி நிற்போமாக! தேவதூதர்களின் பாடல் நமது செவிகளிலும் இன்பத் தொனியாய் ஒலிக்கட்டும்: இதோ, எல்லா மக்களுக்கும் மிகுந்த களிப்பை உண்டாக்கும் நற்செய்தியை அறிவிக்கின்றேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்காகப் பிறந்திருக்கிறார். வானங்களில் தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனிதர் மத்தியில் பிரியமும் உண்டாவதாக.

இந் நன்னாளில் கிறிஸ்துவின் அன்பும், அருளும் நமது உள்ளங்களை ஆண்டு கொள்ள இறைவனை வேண்டி நிற்கிறேன்.

— வண எஸ் வெஸ்லி அரியராஜா, லண்டன்

## சிறப்புநாட்குறிப்பு

| மாதம் | நாள் | சிறப்பு |
|---|---|---|
| டிசம்பர் | 25 | கிறிஸ்துமஸ் |
| ,, | 30 | திருவெம்பாவை ஆரம்பம் |
| ஜனவரி | 1 | புத்தாண்டு |
| ,, | 7 | ஆருத்திரா தரிசனம் |
| ,, | 14 | தைப் பொங்கல் |
| பிப்ரவரி | 6 | தைப்பூசம் |



# Shree Krishna South India Restaurant

194 Tooting High Street, London, S.W.17
Telephone: 01-672 4250
(Prop: R. Ramanarayanan)

Masala Dosai—Uppuma—Iddly—Vadai—Dahi Vadai—Adai—Avial—Sambar
Rasam—Puri—Chapathi—Paratha

Nearest Tube: Tooting Broadway & Colliers Wood
Catering for Weddings & Parties

# INDIAN NATIONAL TRAVELS LIMITED

**At your Service since 1930**

**LOWEST JET FARES to SINGAPORE.**

INDIA, CEYLON, MALAYSIA, FAR EAST,
AUSTRALIA, U.S.A. and CANADA.

**Packing Shipping & Forwarding**
**Export Shopping Service**

25 Bloomsbury Way, London, W.C.1
Telephone: 01-405 1193

# REALFOODS

**for Foods that give Health, Vigour & Vitality!**
**Come and Shop around for:—**

*Pure Honey—Live Yogurt—Soya Beans—Mung Beans—All kinds of Lentils—Almonds — Cashewnuts—Peanuts—Super Cod Liver Oil Capsules—Fresh Fruit Juices—Protein & Vitamin Foods—Herbal Foods—Natural Cosmetics—Sandalwood Soaps & Numerous other Health Food items.*

**REALFOODS 68 The Broadway, Wimbledon, London, S.W.19**
**Telephone: 01-542 7486**
**AND**
**Branches throughout U.K.**

**—A wide variety of wholesome Vegetarian Foods available—**

TEL: 01 684 8437 TEL: 01 654 5446

# MOHAMEDS

**ORIENTAL GROCERS**

267 LONDON ROAD
WEST CROYDON
SURREY

61 PORTLAND ROAD
SOUTH NORWOOD
LONDON, S.E.25

# மேற்கு நாடுகளின் செய்திகள்

## லண்டன் தமிழர்களின் மாபெரும் கிறிஸ்துமஸ் விழா

லண்டன் தமிழர்களின் மாபெரும் கிறிஸ்துமஸ் விழாவொன்று டிசம்பர் மாதம் 23ந் தேதி மாலை 4.00 மணிக்கு தென் மேற்கு லண்டன், பட்னியிலுள்ள மெதடிஸ்ட் தேவாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டைப் போலவே இம்முறையும் தமிழில் வழிபாடுகள் நடைபெறுகின்றன. தமிழில் தோத்திரப்பாடல்கள், தமிழில் கரோல் பாடல்கள், கூட்டு வாத்திய இசை ஆகியவை விழாவில் இடம் பெறும். இறுதியில் கிறிஸ்துமஸ் ஒன்று சேர் விழாவொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வண. பிதா வெஸ்லி அரியராஜா அவர்கள் வழிபாட்டினை நடத்தி வைக்கின்றார். மேற்படி விழா நடக்கும் பட்னி மெதடிஸ்ட் தேவாலயத்தின் முகவரி பின்வருமாறு:

| | |
|---|---|
| பட்னி மெதடிஸ்ட் தேவாலயம், | PUTNEY METHODIST CHURCH, |
| க்வெண்டோலீன் அவென்யூ, | GWENDOLENE AVENUE, |
| பட்னி, லண்டன் தெ.மே.15. | PUTNEY, LONDON S.W.15. |

விழாவில் பங்கு கொள்ள பிரித்தானிய வாழ் தமிழர்கள் அனைவரும் அழைக்கப்படுகின்றார்கள்.

## உலகத் தமிழ் மாநாட்டில் மேற்கு நாடுகளின் பிரதிநிதிகள்

நியூயார்க் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் டாக்.குமரேசன் அவர்கள் ஜனவரி முதல் வாரம் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் நான்காவது உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொள்கின்றார். லண்டன் பல்கலைக் கழகத் தமிழ்ப் பகுதிப் பேராசிரியர் டாக்டர் மார் அவர்களும், எடின்பரோ பல்கலைக்கழக மொழியியல் துறைப் பேராசிரியர் டாக்டர் ஆஷரும் மாநாட்டில் கலந்து கொள்கிறார்கள் எனத் தெரியவருகின்றது.

## லண்டன் தமிழ்ச் சங்கத்தின் புதிய நிர்வாகக் குழு தெரிவு.

லண்டன் தமிழ்ச் சங்கத்தின் 1973–74க்கான ஆண்டுப் பொதுக்கூட்டம் கடந்த டிசம்பர் மாதம் 2ந் தேதியன்று மேற்கு லண்டன் பாடிங்டனில் உள்ள பப்டிஸ்ட் சர்ச் மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்தின் போது நிர்வாகக் குழுத் தேர்வு நடைபெற்றது. 11 பேர் கொண்ட புதிய குழுவொன்று அப்போது தேர்ந்தெடுக்கப்பட்டது.

சிங்கப்பூரைச் சேர்ந்த முன்னை நாள் தொழிற்சங்கவாதியான திரு. எஸ்.செல்வநாயகம் அவர்கள் புதிய குழுவின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். லண்டன் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக இளைய வயதினரான தமிழர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டது இதுவே முதல் முறையாகும். தொழிற் சங்க இயக்க மேற்படிப்பை முடித்துக்கொண்ட திரு. செல்வநாயகம் தற்போது சட்டப்படிப்பை லண்டனில் தொடர்ந்து வருகிறார். கடந்த வருடம் உலக சுற்றுப்பயணத்தை மேற்கொண்ட திரு. செல்வநாயகம் தமிழகத்தின் பெருந்தலைவர்கள் பலரைச் சந்தித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டு லண்டன் தமிழ்ச் சங்கத்தின் நிர்வாகக் குழுவை சிறந்த முறையில் இயக்கி வைத்த திரு. சங்கரலிங்கம் அவர்களிடமிருந்து புதிய பொறுப்பை ஏற்கும் திரு. செல்வநாயகம் கடந்த ஆண்டில் சங்கப் பொருளாளராகப் பணியாற்றி வந்தார். சங்கத்தின் துணைத் தலைவராக டாக்டர் தம்பையா பிள்ளை அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். இவர் சிட்டி பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றி வருகின்றார். நிர்வாகக் குழு அங்கத்தினர் விபரம் பின்வருமாறு:

| | | | | |
|---|---|---|---|---|
| தலைவர் | : | திரு. எஸ்.செல்வநாயகம் | நிர். குழு : | டாக்.ஏ.சந்திரசேகரன் |
| துணைத்தலைவர் | : | டாக். தம்பையா பிள்ளை | | திரு.அழ.இராமநாதன் |
| செயலாளர். | : | திரு. சு.க.சுப்பிரமணியன் | | திரு.ஆ.சு.இராமலிங்கம் |
| துணைச் | | | | திரு.வீ.மெய்யப்பன் |
| செயலாளர் | : | திரு.எஸ்.ராமசாமி | | திரு.சு.சேகரன் |
| பொருளாளர் | : | திரு. என்.தியாகராசன் | | திரு.கொ.காலன். |

## பாரிசில் அனைத்துலகத் தமிழ்ப் பேரவை

உலகெங்கும் வாழும் தமிழர்களை ஒருமைப்படுத்தி அனைத்துலகத் தமிழ்ப் பேரவை ஒன்றை நிறுவ வேண்டும் என்று பாரிஸ் தமிழ்ச்சங்கம் திட்டமிட்டுள்ளது. அதன் முதல் முயற்சியாக அடுத்த கோடை விடுமுறையில் ஒரு மகாநாட்டை ஏற்படுத்துவது பற்றியும் அவர்கள் திட்டமிட்டிருப்பதாகத் தெரியவருகிறது. வெவ்வேறு நாடுகளில் இருக்கும் தமிழ்ச் சங்கங்களோடு இது விடயமாகத் தொடர்பு கொண்டு அவர்களையெல்லாம் பாரிஸிற்கு அழைக்கவிருக்கின்றது பாரிஸ் தமிழ்ச் சங்கம். மேலதிக விபரங்களுக்குத் தொடர்பு கொள்க: திரு.நசீர், தலைவர், பாரிஸ் தமிழ்ச் சங்கம். D 214 R.U.A. 92160 ANTONY, FRANCE.

## லண்டனில் இசை நடன இரவு.

சிறு குழந்தை ஒன்றின் கையிலே இனிப்பைக் கொடுத்துவிட்டு அது ஆவலுடன் உண்ண ஆரம்பிக்கும் போது பறித்துக் கொண்டால் அந்தப் பிஞ்சு இதயம் எதை உணரும். திருமதி நம்பி ஆரூரன் இரண்டே பாட்டுப்பாடி விட்டு எழுந்ததும் அதே உணர்ச்சிதான் எனக்கும் ஏற்பட்டது. நவம்பர் 30ம் தேதி லண்டனிலுள்ள பொது நல நாடுகள் (காமன்வெல்த் இன்ஸ்ட்டிடியூட்) அரங்கில் "லண்டன் ஸ்டேஜ் கிரியேஷன்ஸ் நிறுவனத்தார்" ஒரு விழாவை நடத்தினர். இசைக்கும் நடனத்துக்கும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த விழாவிலேதான் இத்தகைய ஒரு இடி என் தலையில் விழுந்தது. "விநாயகா" என்று பாட ஆரம்பித்தவர் அடுத்த பாட்டை மத்தியமாவதியில் பாடியதுமே ஏக்கம் தொட்டு விட்டது. அதைப் போக்கும் வகையில் அமைந்திருந்தது செல்வி ரங்கா விவேகானந்தனின் நடனம். ஆறு நடனங்களை ஆடினார் செல்வி ரங்கா. நடனங்களில் முகபாவம் உடலசைவு அனைத்துமே அருமையாக இருந்தன. குச்சுப்புடி நடனத்திலே மிகத் தேர்ச்சி பெற்றவர் என்பது நன்கு தெரிந்தது. குறிப்பாக கிருஷ்ண சப்தமும் பதமும் நன்றாக இருந்தன. நடனத்தின் இசையும் இனிமை நிறைந்திருந்தது.

வாத்திய இசை நிகழ்ச்சியில் திருமதி உருத்திராணி பாலகிருஷ்ணன் கோட்டு வாத்தியம் வாசித்தார். அவரும் இரு பாடல்களோடு நிறுத்தி விட்டார். மோகனமும் கதனகுதூகலமும் கொடுத்த இனிமையை அடுத்து வந்த இசை கெடுத்துவிட்டது. ஆங்கில இசையைத் தனியே கோட்டு வாத்தியத்தில் வாசித்திருந்தாலோ அல்லது கர்நாடக இசையை பியானோ அக்கார்டியனில் இசைத்திருந்தாலோ இனிமையாக இருந்திருக்கும் அல்லது புதுமையாகவாவது இருந்திருக்கும்!! இசை நிகழ்ச்சியில் திரு. சுதந்திரராஜன், திரு. இளம்பூரணன், திரு. சிவானந்தன், திரு. பேரின்பராஜா, திருமதி. பேரின்பராஜா ஆகியோர் திருமதி பாலகிருஷ்ணனோடு பங்கு கொண்டனர்.

"பங்ரா நடனம்" என்று பஞ்சாபியர் ஒரு நடனத்தை வழங்கினார்கள். எளிமையான கிராமிய நடனமாக இருந்தாலும் கலைநுணுக்கம் நிறைந்து காணப்பட்டது. திரு. கங்கூலி என்பவர் வங்கப் பாடல் பாடிச் சிறிது மகிழ்வித்தார். நிகழ்ச்சிகளின் இடையே அதிக இடைவேளையின்றி நடாத்திய சிறப்புக்கு அமைப்பாளரைப் பாராட்டலாம். அறிவிப்பாளர் நிகழ்ச்சி நிரலில் அச்சாகியிருந்த நிகழ்ச்சிக் குறிப்புகளை அப்படியே வாசித்தார். ஆரபி என்பதை அராபி என்றும் தசாவதாரம் என்பதை தசவதாரம் என்றும் வேறு பல சொற்களைத் திரித்தும் வாசித்தது குறையாகத் தெரிந்தது. விழாவில் அறிவிப்பு முக்கியம்! அதற்கு ஒரு நல்ல ஆள் கிடைத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்!

— ஹரிந்தோளம் (லண்டன்)

## உற்சவ மூர்த்தி தாபனமும் திருக்கார்த்திகை விழாவும்.

பிரித்தானிய சைவ மாமன்றத்தினர் டிசம்பர் ஒன்பதாம் தேதி விம்பிள்டன் பார்க் மண்டபத்தில் திருக்கார்த்திகை விழா நடத்தினர். கூடவே தமிழ் நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட திருமுருகன் திருவுரு தாபன பூசையும் நடைபெற்றது. சிறப்பாக அபிஷேகமும் விசேட பூசையும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (முன்பு கந்த சஷ்டி பூசையில் ஆரம்ப அபிஷேகம் நடைபெற்றமை பற்றிய செய்தி கார்த்திகை இதழில் வெளி வந்தமை வாசகர்கள் அறிந்ததே). பின்னர் நாற்பது நாள் பூசையில் வைக்கப்பட்டுத் திருக்கார்த்திகையன்று தாபனம் நடைபெற்றது. அபிஷேகத்தையும் பூசையையும் மன்ற உறுப்பினர்களின் உதவியோடு டாக்டர் சர்மா அவர்கள் நடத்தினார்கள். பன்னிரண்டு தீபங்கள் ஏற்றி வைத்திருந்ததும் திருக்கார்த்திகையன்று உற்சவமூர்த்தியைத் தாபித்ததும் விழாவுக்கு மிகப் பொருத்தமாக இருந்தது.

## லண்டன் தமிழரின் வண. பிதாவிற்கு பிரியாவிடை

லண்டனிலுள்ள தமிழர்களுக்கு என தமிழில் கிறிஸ்துவ சேவையை ஆரம்பித்து வைத்த வண. பிதா அரசரத்தினம் அவர்கள் உடல் நலக்குறைவினை நிவர்த்திக்கு முகமாக நியூயார்க் செல்கின்றார். டிசம்பர் 23 தேதி பட்னி மெதடிஸ்ட் சர்ச்சில் நடைபெறும் கிறிஸ்துமஸ் விழாவில் வண. பிதா அரசரத்தினம் அவர்களுக்கு பிரியாவிடை வைபவம் ஒன்று நடைபெறுகின்றது.

## குவைத் தமிழ்ச் சங்கத்தின் தீபாவளி—ஈத் விழா

அரேபிய வளைகுடா நாடான குவைத் நாட்டிலுள்ள தமிழர்கள் அக்டோபர் 27ந் தேதியன்று தீபாவளி — ஈத் விழாவை மிகவும் சிறப்பாக குவைத் நகரில் கொண்டாடினார்கள். விழா குவைத் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றது. நடன நிகழ்ச்சிகள் இசை நிகழ்ச்சிகள் இவற்றிற்கிடையே பல விநோத நிகழ்ச்சிகளும் விழாவில் இடம் பெற்றன. இறுதியில் வந்திருந்த விருந்தினருக்கு தென்னிந்திய உணவு வகைகள் வழங்கப்பட்டன.


**லண்டன் முரசு**

பொங்கல் மலரின் சிறப்பம்சங்களில் சில:

இரு வண்ண அட்டை, சிறப்புக் கட்டுரைகளும் வாழ்த்துக்களும், சிறுகதைப் போட்டி முடிவுகள், பரிசுக் கதை, இன்னும் பல.



# தோன்ற வேண்டுகிறோம்!

அரசியல் துறையில் அறிவினை இழந்து
அரைமணிக் கொன்றாய் அடுத்தவர் வழியில்
கட்சி விட்டுக் கட்சி மாறும்
கண்ணியம் அற்ற கயவர்கள் இன்று
மலிந்தனர் நம்முள். மலிந்ததால் நாடும்
நலிந்தது. அதனால் நலங்களும் குன்ற
வழிவகை இன்றி வாழ்கிறோம் நாங்கள்.

ஞாலத்(து) இருளை நீக்கும் கதிர்போல்
காலத்து வந்து கல்வியில், அரசில்
மேவிடும் புகழை மேதினி வழங்க
வாழ்ந்தனை நீயும்! வாழ்கிலை அதனால்
யாரிடம் போவோம்? யாரிடம் சொல்வோம்?
நேரினில் வந்து நேர்வழி காட்டிட
மீண்டும் ஒருமுறை மேதினி தன்னில்
தோன்றியே எம்மைத் தேற்றிடு வாயோ!

— அநுபவம்.














**LAWNFORD LTD.**

**LEADERS IN QUALITY FASHION FABRICS**

DIRECT IMPORTERS, EXPORTERS,
WHOLESALERS AND RETAILERS.
LARGE STOCKISTS OF:
JAPANESE PLAIN AND PRINTED NYLON GEORGETTE SAREES
AND LUREX BROCADES.
SPECIALISTS IN ENGLISH CURTAIN MATERIALS
ALL THESE AND MANY MORE VARIETIES AVAILABLE AT MOST
KEENEST PRICES.

VISIT US AT
COMMERCE AND INDUSTRY HOUSE
31 MIDDLESEX STREET
ALDGATE, LONDON, E1 7AA
Tel.: 01-247 7129 Cables: YAULEE, LONDON, S.W.19
SITUATED IN THE WORLD FAMOUS PETTICOAT LANE MARKET AREA
UNDERGROUND STATIONS:
ALDGATE, ALDGATE EAST, LIVERPOOL STREET
WAREHOUSE AT 171 ARTHUR ROAD, WIMBLEDON PARK, LONDON, S.W.19
Tel.: 01-946 6914




* * *




மனிதனை எதிர் நோக்கும் பெரும் பிரச்சினைகளில் காலம் இடம் ஆகியவற்றின் விரயமும் ஒன்று. இதைக் கட்டுப்படுத்தும் நாளைய ஊர்தி உருவாகி வருகிறது மேற்கு ஜெர்மனியில். மியூனிச்சிற்கும் ஹறனேவருக்கும் இடையேயுள்ள 600 மைல் தூரத்தை இரண்டே மணி நேரத்தில் கடக்கும் இவ்வியக்கத்தக்க கண்டு பிடிப்பு வழக்கமான புகையிரதங்கள் போல் தரையில் செல் வதல்ல. தரையில் V வடிவில் அமைந்துள்ள இணை மட்டக் குழாய்களில் செல்லும் இவ்வூர்தி இரட்டை அடுக்கு அமைப்பைக் கொண்டிருக்கும் (படம்). அது மட்டுமா? குழாய்களினூடாக குடிநீர், எரி வாயு, மின் கம்பிகள் ஆகியவை செல்லுமாம்! இந்தச் சுவரின்மேலே இன்றைய புகையிரதங்களோ அல்லது வேறு ஊர்திகளோ செல்லலாம். சுவரின் மறு பக்கமும் இந்நவீன ஊர்தி பயணம் செய்வதால் அதிவேகத்தால் ஏற்படும் மோதுகை அபாயமும் தவிர்க்கப்படும்.

* * *

வியாழனில் உயிரினம் இருக்கும் சாத்தியக்கூற்றை ஒப்புக் கொண்டிருக்கிறது அமெரிக்க விண்வெளி நிறுவனம். சூரியனிலிருந்து 5000 லட்சம் மைல்களுக்கப்பால் இருக்கும் வியாழனின் வெப்ப நிலை —139 டிகிரி சென்டிகிரேட். ஆனால் கிரகத்தினுள்ளிருக்கும் வெப்பத்தால் அதன் சில பகுதிகள் உறை நிலைக்கும் மேலே இருக்கக்கூடும் என்றும் விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். சுற்றியிருக்கும் வளி மண்டலத்தில் நீராவியுடன் அம்மோனியா, கார்பன்—டை—ஆக்சைடு, நீரியம் (ஹைட்ரோஜன்) ஆகியவையும் இருக்கக்கூடுமாம். நீருடன் அம்மோனியா சேர்வதால் உண்டாகும் "காரக்" கரைசலில் மேற்சொன்ன வெப்பநிலைகளிலும் வாழக்கூடிய உயிரினம் இதுவரை இல்லையென்றே விஞ்ஞானிகள் கருதி வந்திருக்கிறார்கள். இந்தக்கருத்தை அண்மையில் விஞ்ஞானிகள் மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். காரணம்: ஒரு பாக்டீரியம். அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட இந்தப் பெயரிடப்படாத பாக்டீரியம் மேற் சொன்ன இரசாயன பௌதீக நிலைகளிலும் வாழும் தன்மையுடையதாம்!!!

* * *




"URI GETS BRITAIN IN A TWIST " என்பது ஒரு சனிக்கிழமை வெளிவந்த ஆங்கில நாளிதழின் தலைப்புச் செய்தி. முதல் நாள் இரவுதான் பீ.பீ.சி தொலைக்காட்சியில் யூரி ஜெல்லர் என்ற 27 வயது யூத இளைஞர் பெரும் விஞ்ஞானிகளின் விதிகளையும் அறிவியற் கருதுகோள்களையும் தன் மனோ சக்தியால் தூள் தூளாக்கியிருந்தார். முட்கரண்டிகள் அவர் கைப்பட்டதும் வளைந்தும் நெளிந்தும் போயின. ஓடிக் கொண்டிருந்த கடிகாரங்கள் நின்றன. இந்தச் சாதனைகளை நேரிலும் தொலைக்காட்சியிலும் ஆயிரமாயிரம் மக்கள் பார்த்தனர். தொலைக்காட்சி நிலையத்திலிருந்த பல அறிஞர்கள் அதிர்ந்து போனார்கள். இதைத் தவிர மூடிக் கிடந்த ஒரு உறையினுள் இருந்த வரைபடத்தை அப்படியே அவர் வரைந்து காட்டினார். அமெரிக்காவில் பல சாவிகளை வளைத்துக்காட்டினார். மேலே நீங்கள் காண்பது அவரால் எடுக்கப்பட்ட அவரது புகைப் படம். இதில் என்ன விசேஷம் என்றால் இவர் பிடித்த இந்தப் படத்தை எடுத்த காமிராவின் ஒளி புகும் வழியான "லென்ஸ்" பகுதி அழுந்த மூடப்பட்டிருந்தது!! இவருடைய செய்முறைகள் அனைத்தையும் துல்லியமாகப் படமெடுத்து ஆய்ந்த கலி.·.போர்னியா ஸ்டான் ·.·போர்ட் ஆய்வுக் கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் இவரது செயல்முறைகளை அறிவியலின் எந்தப் பகுதியுடன் சேர்ப்பது என்று புரியாமல் விழிக்கிறார்களாம்! "நாஸாவைச்" சேர்ந்த மின் கணக்கி கூட இவர் முன்னிலையில் இயங்க மறுத்துவிட்டதென்றால் பாருங்களேன்!! பூமிக்கு வெளியே உள்ள கிரகங்களிலிருந்து தனக்கு இந்தச் சக்தி வந்திருக்கக்கூடும் என்கிறார் யூரி ஜெல்லர். நம் நாட்டுச் சித்தர்களது வியத்தகு செயல்களை அவநம்பிக்கையுடன் நோக்கி வந்த நாம் இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறோம்??

—தொகுப்பு: விஜய்.

THE
AKBAR TANDOORI
115 WESTBOURNE GROVE
LONDON, W.2

We specialise in:—
TANDOORI CHICKEN
SHEEK KEBAB
CHICKEN & MUTTON TIKKA
NAN
AND CURRIES

For Reservation—
Tel.: 727 8938/6416

TAKE AWAY SERVICE
AND PARTIES CATERED FOR

Nearest Tube: Notting Hill Gate
Queensway
Bayswater



SAREES

FOR THE FIRST TIME
IN TORONTO, THE
LARGEST SELECTION
OF SAREES FROM
JAPAN, AND INDIA
UNDER ONE ROOF.
Blouses, petticoats and saree-falls
made to order.
Mail orders executed promptly.



THE SAREE CENTRE
107 Yorkville Avenue, Toronto
Near Bay Subway – Cumberland Exit.
Open six days a week – Monday thru Saturday
11 A.M. to 7 P.M.
Tel: 924-9988



SAREF TRAVEL LIMITED

(B.O.A.C. GENERAL SALES AGENTS FOR INDIA)

LOWEST EVER SCHEDULED FARES TO MADRAS!

| | |
|---|---|
| SINGLE | £93.85 |
| RETURN | £177.65 |

SAREF TRAVEL LIMITED, 251 Grand Buildings,
Trafalgar Square, LONDON, W.C.2. (Tel: 01-839 2603)



For Sarees Visit

Raj Stores

315 Kilburn High Road, LONDON, N.W.6.
Telephone: 01-624 5647 (Office) and 01-455 4773 (Residence)
One minute from Kilburn Tube Station - Opposite Brondesbury (L.M.S.) Station
Close to N.T. Gas Board - Buses: 8b, 16 and 142

LATEST SPECIALITY

NYLON NYLEX 630, 640, 644, and 680.
NYLON NYLEX PLAIN and PRINTED.
FRENCH CHIFFON, WOOLLEY GEORGETTE, SILK SAREES, EMBROIDERY SAREES,
LUREX SAREES, CASHMERE SAREES, KANJIVARAM, HAKOBA, etc., etc.



நியூயார்க் சைவக்கோவில் நிதிக்கு நடைபெற்ற கண்ணகி நாட்டிய நாடகத்தில் பத்மினி தோன்றும் ஒரு காட்சி



நியூயார்க்கில் நடைபெற்ற கண்ணகி நாட்டிய நாடகத்தில் ராகினி தோன்றும் ஒரு காட்சி.



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர்களி லொருவரான மன்னார் எம்.பி. திரு.அழகக் கோன் அவர்கள் அமரரானார்.



மதுவிலக்கால் சீரழிந்த ஒரு குடும்பத்தை அடிப்படையாகக் கொண்டு ராஜாஜியின் "திக்கற்ற பார்வதி" படமாகி வருகிறது. ராஜாஜி பிறந்த நாளில் வெளிவரவிருக்கும் இத்திரையோவியம் அமரர் ராஜாஜி பிறந்த தொரப்பள்ளி கிராமத்திலேயே மிகக் குறைந்த செலவில் படமாக்கப்பட்டு வருவதும், ஸ்ரீ காந்தும் லட்சுமியும் முக்கிய வேடங்களில் நடிப்பதும் இதன் சிறப்பு அம்சங்களாகும்.



லண்டன் தமிழ்ச் சங்கத்தின் புதிய தலைவராக
தெரிவு செய்யப்பட்டுள்ளார் திரு செல்வநாயகம்.



லண்டன் தமிழர்களுக்கு கிறிஸ்துமஸ் நற்செய்
விடுத்துள்ளார் வண பிதா வெஸ்லி அரியராஜ
அவர்கள் (பக்கம் 7)



லண்டன் ஸ்டேஜ் கிரியேஷன்சாரின் இந்தியக் கலை நிகழ்ச்சியில்
பரதநாட்டிய விருந்தளித்த யாழ்ப்பாணம் ரங்கா விவேகானந்தா
வின் ஒரு அபிநயம்.



அண்மையில் லண்டனில் நடைபெற்ற தமிழ் நங்கைகளின் கலைவிழாவின்போது, இடமிருந்து வலம்: வள்ளி சுப்பையா, சுந்தரி கிருஷ்ணசாமி, சியாமளா ஜெயசிங்கம், புஷ்பா சிவஜோதி, மதுமதி கதிர்காமராஜா, மாலதி கிருஷ்ண சாமி; கௌரி ஆனந்தராஜா, கீதா இரத்தினசிங்கம்; வள்ளி சுப்பையா; நிர்மலா ஜெயசிங்கம், மாலதி கிருஷ்ண சாமி, அஞ்சலை மெய்யப்பன்.

# JAMALMOHIDEENS

7, 8 & 9 WOODFALL ROAD, FINSBURY PARK, LONDON, N4 3JD.

TELEGRAMS: MOGYDENG,
LONDON, N.4.

TELEPHONES: 01-272 7417/8371
and 01-263 1718

IMPORTERS AND WHOLESALE CASH & CARRY

Cotton Vests & Banians, Cotton Handloom - Lungis & Sarees. Madras Cotton Fabrics & Crepe (Cheese) Fabrics. Velveteen Blazers and Red Rose & Flower Queen Agarbathis.

Representatives & Appointed Agents for:

Messrs. Zenith International Corporation Ltd., Madras.
Messrs. Mars Hosiery & Company, Tirupur.
Messrs. Mathalaimuthu Mudaliar & Sons, Karur.
Messrs. Dhanalakshmi Weaving Works, Cannanore.
Messrs. Transworld Export Corporation, Madras.
Messrs. L.K.S. Agarbathi Works, Madras.

Bankers: State Bank of India, West End Branch, London, W1X 1RB.

For SAREES, LUNGIS (Sarongs) and TAMIL RECORDS

PLEASE CONTACT:

TAMIL FILM & SOCIAL CLUB
London, S.W.11.

TELEPHONES: 01-228 8751 and 01-228 1626

**Trident** TRAVEL & TOURS

When you want to travel please think of Trident Travel & Tours we can offer you the most competetive prices to:

INDIA, DACCA, HONG KONG, SINGAPORE, AUSTRALIA, CANADA, NEW YORK AND ALL OTHER PARTS OF THE WORLD IN OUR JET FLIGHTS.

For further informations please write or telephone:

318 HOE STREET,
LONDON, E.17.
Tel.: 01-520 7911

CITY OFFICE:
18 YORK WAY,
LONDON, N.1.
Tel.: 01-837 9402
Tel.: 01-837 2711

IN INDIA:
TRANS-CONTINENTAL TRAVEL TOURS
202 JOLLY BHAVAN 1,
10 NEW MARINE LINE,
BOMBAY—20.

# குருக்ஷேத்திரம்

விஜயேந்திரன்
லண்டன்

வெளியே நல்ல கோடை வெயில். அனல்காற்று சுழன்று வீசுகிறது. வீட்டின் புழுக்கத்தைத் தாங்கமுடியாது வெளியே அமர்ந்திருக்கிறேன். வாயிலின் முன்னே அழகுத் தோரணவளைவாய் வளைந்து கிடக்கும் மல்லிகைப் பந்தல் கூட அனலிடம் தோற்றுப் போய் வாடிக் கிடக்கிறது. தலையைத் தடவி விட்டுக் கொள்கிறேன். அங்கொன்றும் இங்கொன்றுமாக சிதறிக் கிடக்கும் நரை மயிர்களைக் கையால் அளையும் போது உடலின் உஷ்ணத்தை உணரமுடிகிறது. கிராமத்தில் ஆனந்தமாக வசிக்கும் பெண் சசியிடம் போய் கொஞ்ச இருப்போமா என்று மனம் ஏங்குகிறது. விடியற்காலை காப்பியும் பத்திரிகைகளும் கடற்கரைக் காற்றும் அங்கே கிடைக்காதே என்ற நப்பாசை வேறு தோன்ற ஆரம்பிக்கையிலே ஒருவாறு அரைத்தூக்கத்திலிருந்து எழுந்துகொள்கிறேன்.

"கறிப்புலே!!கறிப்புலே!!"

தெருவில் கோரமாய் முழங்கும் கறிவேப்பிலை விற்கும் பெண் என்னைப் பார்த்ததும் கடைவாய்வரைக்கும் சிரிக்கிறாள். நானும் சேர்ந்து சிரித்து வைக்கிறேன்.

"அம்மா இல்லீங்களா சாமி!!"

"சமையற்கட்டிலிருந்து லட்சுமி இங்கு இப்போ வர முடியாதே. திரும்பி வரும்போது பார்க்கலாம்!!" அவளை மெதுவாய் அனுப்பிவைக்கிறேன். வழக்கமான அதே நீள் சிரிப்புடன் — என் தொந்தியைப் பார்த்தோ என்னவோ — போகிறாள் அவள்.

"சார்!!போஸ்ட்!!"

"ஓவேறா இன்றைக்கு லேட். அது சரி யாராக இருக்கலாம்!! நேற்றுத்தானே வேணுவின் கடிதம் வந்தது!!கனடாவிலிருந்து!!விமான அஞ்சல் போலிருக்கிறதே!!! எழுந்து சென்று வாங்கும்போதே தெருவில் கண் பாய்கிறது!!"

"கிரீச்" என்று பக்கத்து வீட்டின் முன் வந்து நிற்கும் வாடகைக்கார் மாதவனுடையது. வாட்டசாட்டமான அந்த இளைஞன் வாயிலில் நின்றபடியே பணிவுடன் சிரிக்கிறான். நெற்றியின் விபூதி இங்கேயே பளிச்சிடுகின்றது!!! மகிழ்வோடு சிரிக்கிறேன். ஒவ்வொரு வெள்ளியும் கோவிலில் காணலாம் அவனை. கண்ணை மூடிக்கொண்டு ஒரு மூலையில் அடக்கமாக அவன் நிற்பதை அடிக்கடி கண்டிருக்கிறேன். பௌராணிகர் கதை சொல்லும் போது அவனைப் போல் அவ்வளவு நிசப்தமாக எவருமே கேட்க மாட்டார்கள். அவரும் அவனுக்குத்தான் கதை சொல்வார். அவனை யாரும் ஒரு டாக்சி ஓட்டி என்றே சொல்லமாட்டார்கள்.

கடிதத்தை மௌனமாகப் பார்க்கிறேன். வெளிநாட்டுத்தபால். அதுவும் பழகிய அந்தக் கைவெழுத்து. சந்தேகமில்லாமல் இது வேணுவேதான். இடது மூலையில் அடித்துக்கிடந்த அந்தரங்கம் என்ற சிவப்பு எழுத்துக்களில் கண்கள் குத்திட்டு நிற்கின்றன.

"என்னுங்க! கடிதத்தைக் கையிலே வைத்துக்கொண்டு திகைத்துப் போய் அப்படியே நின்று விட்டீர்கள்!!" மனைவி லட்சுமி உள்ளேயிருந்து வருகிறாள்.

அது ஒரு பத்திரிகைக் கடிதம். முதன் முதலாக ஒரு பொய் சொல்லி வைக்கிறேன். வாங்கிய மிட்டாயை மற்றவர்க்குக் காட்டாமல் அவ்வளவையும் தானே தின்னப்



...

பார்க்கும் குழந்தையைப் போல அந்தரங்கம் என்ற வார்த்தை ஆக்கி விட்ட வேதனை இதயத்தில் பரவுகிறது அவள் மகனின் கடிதத்தை அவளிடமிருந்தே மறைத்ததாலோ என்னவோ!! ஏதாவது பத்திரிகை சந்தாக் கடிதமாக்கும் என நம்பிக் கொண்டு உள்ளே போகிறாள்.

வேணுவின் கடிதம் என்பதே சற்று சஞ்சலத்தை உருவாக்கி விடுகிறது. வழக்கமாக அவனிடமிருந்து, என்னுடைய முகவரிக்குத்தான் கடிதும் வருமென்றாலும், எல்லாமே அம்மாவுக்குத்தான். அப்பாவைப்பற்றி அவன் அம்மாவிடம் விசாரித்திருப்பான். திரும்பித் திரும்பிக் கேட்டு அதை வாசிக்கச் சொல்லிக் கேட்பாள் அவள் நான் நிச்சலனமாக வாசித்து முடிப்பேன். ஆனால் இன்று ஏன் இந்த அந்தரங்கம்!!

மெதுவாகப் பிரித்துப் படிக்கிறேன்.

மணி மணியான கையெழுத்தில் அது!! ஆங்கிலக் கடிதம். முதல் தடவையாக அப்பாவுக்கே ஆங்கிலத்தில் எழுதியிருக்கிறான் பிள்ளை.

"இந்த நாட்டின் சூழலில் மனதைத் தளரவிடாது உங்கள் அறிவுரைப்படி வாழும் மகன் சொல்லப் போவதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. நாலு வேதங்களையும் நம்நாட்டு மக்களின் வாழ்க்கை நிலைகளையும் ஒரு ஆசிரியர் என்ற முறையில் படித்து வைத்திருக்கும் நீங்கள் நான் சொல்ல இருப்பதை ஒரு மனிதாபிமானக் கண்ணோட்டத்துடன் நிச்சயம் கேட்பீர்கள் என்ற நம்பிக்கை.....!"

இவன் என்ன சொல்கிறான்? குழப்பமாக இருக்கிறதே!. வேணுகோபாலா!! தயவு செய்து சொல்லித் தொலையடா!!

ஒரு வழியாக அக் கடிதத்தைப் படித்து முடிக்கிறேன். அவனது வார்த்தைகள் ஒவ்வொன்றும் விஸ்வரூபமெடுத்து என்னை விழுங்க வருவது போல ஒரு பிரமை. நெஞ்சின் ஏதோ ஒரு மூலையில் சுரீரென்று வலி எடுக்கிறது. மார்பை நீவி விட்டுக் கொள்கிறேன்.

யாரோ தமிழர்களாம். நல்ல குடும்பமாம். இந்த வரிகளைப் படிக்கும் போதே அதனைக் கிழித்து எறிந்திருப்பேனேயாகில் அந்த அவலத்தைப் படிக்க நேர்ந்திருக்காது. ஆதவனின் தண்மை குறைந்து வரும் போது இதயம் கொதிக்கத் தொடங்குகிறது. மெதுவாக எழுந்து முன்னும் பின்னும் சற்று நடக்கிறேன். ஜிப்பாப் பைக்குள் கடிதத்தைச் செருகிவிட்டு

"லட்சுமி" !! உள்ளே குரல் கொடுக்கிறேன்.

"வெளியே சற்றுப் போய் வருகிறேன்.

"இதென்ன அதிசயம். சாப்பிடாமல் அதுவும் இந்நேரம்!! ஏதோ சொல்ல வந்தவளை எனது மௌனமே தடுத்து நிறுத்தியிருக்க வேண்டும்.

வயிற்றில் சற்று பொருமலாக இருக்கிறது. பசி இல்லை. வந்ததும் சாப்பிட்டுக் கொள்கிறேன். நீ சாப்பிட்டு விடு!! நான் போய் அந்த வரன் விஷயமாய்ச் சாஸ்த்திரியாரைப் பார்த்துவிட்டு வருகிறேன்!!

வரன் என்பதைக் கேட்டவுடன் அவளுக்கு வாயெல்லாம் பல்லாகிறது. உம்!. அதைக் கேள்விப்படும் போதுஎன்னவாகிறாளோ தெரியாது!. அவனுக்கு, அதான் என் பையனுக்கு, இனி என்ன வரன் வேண்டியிருக்கிறது?

சரி என்று அவள் தலையசைக்கிறாள்.

மெதுவாகத் தெருவில் இறங்கி நடக்கிறேன்!. வழக்கமாக செல்லும் பாதைதான் எனினும் பாதை புதியதாகவே உணர்கிறேன். வெறிச்சோடிக்கிடக்கிறது வழியெல்லாம்..!

என் மனத்தைப் போலவே அலைகளும் சுழன்று சுழன்று அடிக்கின்றன. சுண்டல்காரரின் ஆரவாரமும் பெரியவர்களின் வேடிக்கைப் பேச்சுக்களும் அலை ஓசையையும், மீறிய குரலில் கேட்கிறது. தெரிந்தவர்கள் யாராவது பார்த்துவிடுவார்களோ என்றும் பயமாக இருக்கிறது. மெதுவாகப் போய் ஒரு படகின் மறைவில் ஒதுங்குகிறேன்...! மனத்தின் பாரத்தை எதனாலும் குறைக்கமுடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கையில் காலமும் நழுவிக் கொண்டிருக்கிறது. ஆதவன் மலைவாய்க்குள் விழுந்து கொண்டே இருக்கிறான். இங்கே தானே முன்பு சசியையும் வேணுவையும் அழைத்துக் கொண்டு வருவேன். அவர்கள் எவ்வளவு சந்தோஷமாக மணல் வீடு கட்டி விளையாடுவார்கள்.!

அந்த வேணுவா.? அவனா இப்படி போய் முடிவு செய்தான்??

இருட்டி விட்டது!! தெரு விளக்குகள் சரேலென்று எரியத் தொடங்குகின்றன. சற்று தூரத்தில் காரொன்று வந்து நிற்கிறது. யாரோ இறங்கி இந்தப் பக்கம் வருகிறார்கள்.

யாராவது சினிமாக்காரர்களாக இருக்கும். ரகசியமாகக் காற்று வாங்க வருவார்கள்!!

"வணக்கம் சார்!!"

திடுக்கிட்டு விடுகிறேன்..

"யாரது.? மாதவனா.?"

"ஆமா சார்!! நீங்க வெகு நேரமா தனியா உட்கார்ந்திருப்பதைப் பார்த்தேன். ஆனா நான் இப்போதான் ஒரு சவாரியை விட்டுட்டு வரேன்.!"

"எப்படியப்பா சௌகரியமெல்லாம்.?" எனது குரலின் தழுதழுப்பை சாதுரியமாக மறைத்துக் கொள்கிறேன்.

"பரவாயில்லே சார்.! எனக்கு நேத்திக்கு கல்யாணம் முடிஞ்சிட்டுது சார்."

"அப்படியா!! எனக்கொரு மூச்சு விடலையே நீ!! கெட்டிக்காரனப்பா!!"

"அப்படி இல்லே சார். ஒருத்தரையும் கூப்பிடாமே நானே ரிஜிஸ்ட்ரார் ஆபீஸ்லே போய் செய்துகிட்டேன் சார்.. நல்ல நாளாப் பார்த்து உங்க கிட்டே ஆசீர்வாதம் வாங்க வீட்டுக்கே வரலாம்னு இருக்கேன் சார்."

"நல்ல நாள் இனி மேல் வருமாப்பா??" மனதில் எழும் வேதனையை அடக்கிக் கொண்டு கேட்கிறேன்..

"மணப் பொண்ணு யாரு.?"

"கிறிஸ்டினா!!"

"யாரது??!"

சுரீலென யாரோ நெற்றிப் பொட்டில் அடித்தாற்போல ஒரு வலி!! அவளா?? இவனுக்கா?!

"ஆமா சார்!! உங்க கேள்வி எனக்குப் புரியுது!! அவ ஒரு பொண்ணு!! ஏதோ விசயம் புரியாமல் ஏமாந்துட்டா!! அதுக்குப் போய் சாவுதானா பிராயச்சித்தம்??? அதுக்காவத்தான் நானே ஏத்துக்கிட்டேன். அவ ஏதும் மறுப்பே சொல்லலை!! ஆனா ஒன்னு அழுதா!! என் காலைப் புடிச்சுக்கிட்டு அழுதா!!"

மெதுவாக அவளைப் பற்றிக் கண்டவை கேட்டவைகளை நினைத்துக் கொள்கிறேன்!!

கலகலவென்ற சிரிப்புடன் அவர்கள் படகின் மறைவிலிருந்து வெளியே வரும் போதெல்லாம் எவ்வளவு ஆயிரம் கண்கள் நிலைத்து நிற்கும். நாவுகளெல்லாம் முணுமுணுக்கத்தொடங்கும். பக்கத்து கம்பெனி டைப்பிஸ்ட்டும் அக்கௌண்டென்ட்டும் என்பது மட்டும் எனக்கு விளங்கும். வாலிப நெஞ்சங்களின் பொருமல்களையும் பொறுமைப் பேச்சுகளையும் சட்டை செய்யாது விட்டு விடுவேன். ஆனால் அந்த ஒரு நாள்!! நான் வழக்கமாக அமரும் படகின் மறைவு. சரேலென்று தீயை மிதித்தவன் போலத்திரும்பி நடக்கிறேன் காரணம்!! பார்க்கக்கூடாத ஒன்றை—அவர்களின் நெருக்க

மான நிலையைப் பார்த்ததுதான்!.எல்லாமே தலைக்கு மேல் போய்விட்டது என்பதை உணர எனக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை!.

அவர்கள் நலமாகத் திருமணம் செய்துகொள்ளவேண்டும் என்று வாழ்த்தினேன்!!அடக் கடவுளே என் வாழ்த்துக்கு இவ்வளவு சக்தியா??

மாதவனுக்கு நான் நினைப்பதெல்லாம் புரிந்திருக்க வேண்டும். ஏதோ சொல்ல வாயெடுத்தான்.

சூல் கொண்ட மேகம் போல் என் இதயத்திலே ஒரே இருட்டு..ஒரே இரைச்சல்!

"அவன் அவளை விட்டுட்டு எங்கேயோ ஓடிட்டான் சார்!" கோழை!!"

"முந்தா நாள் இங்கேதான் அவளைப் பார்த்தேன் சார்!!ஒரு லேட் நைட் சவாரியை விட்டுப்புட்டு இந்தப் பக்கமா வந்தேன் சார். அப்போ இங்கே யாரோ பொண்ணு கடற்கரைப்பக்கமா தண்ணியை நோக்கி நடக்கிறது தெரிஞ்சவுடனே ஒரு கேசுன்னு புரிஞ்சிடிச்சு!!டாக்சியை நிறுத்திட்டு உடனே ஓடி வந்து புடிச்சேன். அவளைச் சாக உடலை.அழத் தொடங்கிறா சார் அவ!.எனக்கும் கூட தண்ணி கண்ணுலே வரத் தொடங்கிச்சு!.ஆயிரம்தான் ஆனாலும் அவ ஒரு பொண் இல்லையா சார்!!"

நான் அவனையே பார்த்தேன். என் வெளிப்புற அமைதிக்குப் பின்னால் மனதுக்குள் ஒரு புயல். நல்லதும் கெட்டதும் அங்கே ஆக்கிரமிப்பு செய்து கொண்டு ஒரு குருக்ஷேத்திரக் களமாக ஆக்கிக் கொண்டிருந்தது!!! குருக்ஷேத்திரமா??ஆமாம் .நீதிக்கும் அநீதிக்கும் ஏற்பட்டபோராட்டத்தின் மேடையல்லவா அது!!நம்முடைய மனங்களும் அப்படித்தானே!!மனச்சாட்சி என்ற நீதி நம் வெளிப்புறச் செயல் என்ற அநீதியுடன் மோதுவது எத்தனை முறை??என் பழமை நினைவுகளுக்கும் அவனது புரட்சி நோக்கத்துக்கும் போர்!!வெல்லப் போவது அவனா? நானா? "வினையும் நானே!!வினை முடிப்பவனும் நானே" என்ற சங்காரம் செய்த கண்ணா !! தர்மம் யார் பக்கம்??நீ நிற்பது யார் பக்கம்??

"எனக்கு ஒரு வழி சொல் கண்ணா!!"

என் மனத்தின் அவலக்குரல்..என் அலறல்... என் காதில் விழுகிறது!!

"என்ன சார் அப்படி நின்னுட்டீங்க?.நான்!! ஒரு இந்து!!அவள் கிருத்துவச்சி என்று?!அப்படி ஒன்றும் இல்லை சார்!.ஒரு உயிரைக் காக்கப் போகிற நேரத்திலே மீன மேஷம் பார்த்தா முடியுமா சார்??? வெறும் சாதாரணப் பொண்ணோட கண்ணீரை நான் துடைக்கல்லே சார்!!ஒரு தாயின் கண்ணீர் சார்!! கன்னியா இருக்கும் போதே குழந்தையைப் பெத்துக்கிட்டதா பௌராணிகர் கதையிலே நேத்து சொன்னாரே! இந்தக் கதையையெல்லாம் நம்ம முன்னோர்கள் எழுதி வைச்சதே எங்களைப் போன்ற ஜனங்க எல்லாத்தையும் புரிஞ்சிக்கிடத்தான் சார்!!பங்களா தேசத்துப் பொம்பளைங்கள்ளே எத்தனை பேர் இந்நேரம் செத்திருப்பாங்க இந்நேரம் இப்படியொரு நிகழ்ச்சி நடக்கலைன்னு கேட்டா!!"

"குந்தி!!பங்களா தேசத்துப் பொம்பளைங்க."

கடவுளே எவ்வளவு தெளிவாகச் சொல்லிட்டு நிற்கிறான்!!நாலு வேதங்களை கரைத்துக் குடித்தேன்!! எனக்கு இது உறைக்க இத்தனை நாளாகியிருக்கிறதே!! காலங்காலமாய் எல்லோரும் தேடித் திரிவது இந்தப் பதிலுக்காகத்தானே!!

சொல்லவே முடியாத வெட்கம் என்னைச் சூழ்ந்து கொண்டது. காற்று சுழன்று சுழன்று அடிக்கையில் அலைகளின் ஓசையையும் மீறி வேணுவின் குரல் என் காதுகளில் ரீங்காரமிடத் தொடங்கியது.

".....நான் துடைக்கப் போவது ஒரு தாயின் கண்ணீர் என்பதாலோ என்னவோ முன்னெப்போதுமில்லாத மகிழ்ச்சியுடனிருக்கிறேன்.சமூகத்தில் தான் எனக்கு அங்கீகாரம் இல்லாவிடினும் என் பெற்றோரின் ஆசீர்வாதம் கிடைத்தால் அதுவே எனக்குப் போதும்..."

மனதில் வேணு உயர்ந்தவனாகத் தெரியத் தொடங்கினான். ஆஞ்சநேயனைப் போல விஸ்வரூபம் எடுத்து நின்றான் அவன்!!..ஆயிரமானாலும் அவன் என் பிள்ளை.! என்னை அறியாமலேயே ஒரு கம்பீரம் பிறக்க அந்த வெண்மணற் பரப்பிலே எழுந்து நிற்கிறேன். வேட்டியில் ஒட்டிக்கொண்டிருந்த மணலைத் தட்டி விட்டேன்..இல்லை!!இல்லை!!! என் மனதில் ஒட்டிக் கொண்டு உறுத்திய களங்கத்தைத் தட்டி விட்டேன்!!

"மாதவன் உனக்கு ஒன்று தெரியுமா.? கனடாவிலே வேணுவுடன் வேலை பார்க்கும் தமிழ்ப் பெண் ஒருத்தியை யாரோ ஒரு வெள்ளைக்காரப் பாவி குடிவெறியிலே பாழ்படித்திட்டானாம்!!அவமானத்திலே சாகப் போன அவளை வேணுதான் காப்பாத்தி, திருமணம் செய்யப் போவதாக சத்தியமும் செய்து கொடுத்திட்டானாம்!!!"

மாதவன் கண்களில் பிரகாசத்துடன் என்னையே உற்றுப் பார்ப்பது அந்த இருளிலும் எனக்குத் தெரிகிறது.

"எங்களுக்கும் சம்மதம் என்று ஆசீர்வதித்து எழுதப் போகிறேன்!!!!"

எனக்கே சந்தேகமாக இருக்கிறது.இது என் குரல் தானா??எங்கிருந்து வந்தது இந்த கம்பீரம்?? உணர்ச்சி சிலிர்ப்புத் தானோ என்னவோ?உடலைக் குலுக்கி விட்டுக் கொள்கிறான் மாதவன்!!ஒளிரும் கண்களுடன் கை குவித்து வணங்கும் மாதவன் மங்கிய ஒளியில் எனக்குத் தெரிகிறான்.

"சார்!!உங்களிடத்திலேயே உங்க மகனுக்கு ஆசீர்வாதம் கிடைச்சப்பறம் எனக்குக் கிடைக்காமப் போயிடுமா ஒரு நல்ல நாளிலே அவளையும் கூட்டிக்கிட்டு வாரேன்சார்

என்றுமில்லாத நிம்மதி மனதை ஆக்கிரமிக்க விடை கொடுத்து அனுப்புகிறேன் அவனை... நிழலோட்டம் போல அவன் நடந்து செல்வது தெரிகிறது.காந்தி சிலை முன் அவன் மண்டியிட்டு வணங்குகிறான்!!!

"மாயையற்ற மெய்வழியில்,இருளகன்ற ஒளிமிகுபாதையில்,மரணமற்ற அமரத்துவ நிலையடைய எமக்கு வழி காட்டுவாய்!!" இந்த சொற்கள் மனதில் ரீங்காரமிட வீடு நோக்கி நடையைக் கட்டுகிறேன்.

!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!

**லண்டன் முரசு**

நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு

மாசித் திங்கள் லண்டன் முரசு இதழ் யாழ்ப்பாணத்தில்
நிகழவிருக்கும் நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டின்
நடவடிக்கைகள் அடங்கிய சிறப்பிதழாக வெளிவரும்.

# நாடி வரும் கொஹூடெக்

விசாகன்

சூரியனை 75,000 வருடங்களுக்கு ஒரு முறை சுற்றி, சூரியத் தொகுப்பிற்குள்(Solar System)ளால் மணிக்கு 70,000 மைல் வேகத்தால் வந்து கொண்டிருக்கும் "கொஹூடெக்" தூமகேதுவை(Kohoutek Comet ) வெகு விரைவில் நாம் அதி காலை வேளைகளில் வெறும் கண்களாலேயே பார்க்கப் போகின்றோம். அதுவும் கிறிஸ்துமஸின் போது சூரியன் சந்திரன் இவற்றிற்கு அடுத்தபடியாக ஒளி மிக்க விண் பொருளாக விளங்குமாம் இந்த "கொஹூடெக்" தூமகேது. தைப் பொங்கலின் போது மிக ஒளி மிகுந்து வானத்தில் 1 / 6 பங்கு நீளத்திற்குக் கூடப் பரவித் தெரியுமாம் இந்த விண்பொருள்!




அது சரி "கொஹூடெக்" தூமகேது என்றால் என்ன என மூளையைக் குழப்பிக் கொள்ளாதீர்கள். "கொஹூடெக்" பற்றிய விபரங்களை இதோ தருகின்றேன். ஒன்பது மாதங்களுக்கு முன்னர் செக்கோஸ்லோவாகியாவினைச் சேர்ந்த விண் வெளி ஆய்வாளர் "கொஹூடெக்" விண்வெளியை நோக்கி ஆய்ந்து கொண்டிருந்தார். அப்போது பூமியை நாடி வந்து கொண்டிருந்த இந்த தூமகேதுவைக் கண்டுபிடித்தார் . அவர் கண்டுபிடித்த இத் தூமகேதுவுக்கு அவர் பெயரே சூட்டப்பட்டது. சுமார் 450 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் சூரியனையும் அதன் கிரகங்களையும் ஏற்படுத்திய நட்சத்திரவெளித் தூசிலிருந்து வெளியாகியது தானும் இந்தத் தூமகேது. இதுவே தற்போது பூமியின் அருகே வந்து கொண்டிருக்கிறது.

"கொஹூடெக்" தூமகேதுவை ஆராய்வதன் மூலம் சூரியத் தொகுப்பையும் தூமகேதுக்களையும் உண்டாக்கிய மூலாதாரப் பொருள்களைப் பற்றிய பல உண்மைகளை அறிய முடியுமாம். இதனையிட்டு அமெரிக்கர்கள் தங்களது "ஸ்கைலாப்" விண்வெளிக்கலம் வழியாக கொஹூடெக்கினை ஆராய்வதற்காக பல விஞ்ஞானக் கருவிகளை அனுப்பியுள்ளார்கள். கிறிஸ்துமஸின் போது "ஸ்கை லாப்" விண் வெளி வீரர்கள் தமது கலத்தினின்றும் வெளியேறி விஞ்ஞானக் கருவிகள் மூலம் கொஹூடெக்கின் திசையில் வைத்து விஞ்ஞானக் கணிப்புக்கள் செய்வார்களாம். அதோடு மட்டுமல்லாது சுக்கிரன் ,புதன் கிரகங்களை நோக்கி சென்று கொண்டிருக்கும் "மாரினர்" 10 விண்வெளிக் கலத்துள் உள்ள கருவிகள் கொஹூடெக்கைப் புகைப்படம் பிடிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளனவாம். இதைத் தவிர உலகின் பல பாகங்களிலிருந்தும் தொலை நோக்கிக் கருவிகள் மூலம் தகவல்கள் சேகரிக்கப்படுமாம். மெக்சிக்கோவின் வடக்குப் பகுதியிலுள்ள சொகோரோ (Socoro) வில் "கொஹூடெக்கைக் கண்காணிக்க மட்டும் விசேட வானிலை நிலையம் ஒன்றினை ஏற்படுத்தி வருகின்றதாம் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா(NASA)!!

**T.R.A. ENTERPRISES Ltd.**
**118 BICKERSTETH ROAD LONDON S W 17**

**ECONOMY & SPECIAL FLIGHTS**

**TO SRI LANKA SINGAPORE & MALAYSIA**

**RETURN FARES TO SRI LANKA from £139**

**TRY US BEFORE YOU BOOK**

**CONTACT: DAY or NIGHT**

**K.C.RAJASINGAM 01-672 0579**

**D.ANDREE 01-961 0680**

இந்தியக் கைத்தறி ஆடைகளையும்
இந்தியப் பண்டங்களையும் பிரான்ஸில்
தருவித்து விற்பனை செய்பவர்.

**ALYMARECAR**

Vêtements Exotiques
No 5 Bois du Temple-App. :5051
93390 CLICHY SOUS BOIS
(FRANCE)

விற்பனை விசாரணைகள் வரவேற்கப்படும்.





**MALAYSIA & SINGAPORE Restaurant**

Open from,
12 NOON – 3 P.M
6 P.M – 11 P.M

*Exquisite-South Indian & Malaysian Dishes.*

DHOSAI-MASALA DHOSAI-SAMBAR,
RICE & CURRY, ETC..

20. CHILDS STREET., EARLS COURT
LONDON S.W.5. (01-370 2445)

Nearest tube
Earls Court.



**PERSONAL EXPORT**
**DISCOUNTS OF 20% ON**
SEWING MACHINES—TAPE RECORDERS—
RADIO AND PHOTOGRAPHIC GOODS

**FELL OF LONDON**

342 COLDHARBOUR LANE
BRIXTON, S.W.9
01-733 4576

Radio and T.V.
Refrigerators
Washing Machines
Tape Recorders
Sewing Machines
Typewriters
Seiko Watches
Photographic equipment
Hi-fi, Triang Toys
Parker Pens
Air Conditioners
and Dictating Machines



# அன்புள்ள ஆசிரியருக்கு

முதலாவதாக வெளியிடப்படும் கடிதத்திற்கு
£1 – 00 பரிசு அனுப்பிவைக்கப்படும்.

## தமிழ்ப் பணி வளர...

பேராசிரியர் தமிழ் சுவெலபில்லின் "முருகனின் புன்னகை" என்ற நூல் பற்றிப் பேராசிரியர் நம்பி ஆரூரனின் நூல் நிறை சிறப்பாயிருந்தது.. நூல்நிறைப் பகுதி, அந்நூலை மூலத்திலேயே படிக்க வேண்டும் என்ற அவாவினை எழுப்பியுள்ளது. ஓர் ஐயம். தந்நேரில்லாவா? அல்லது தன்னேரில்லாவா? கடைசி பத்தி . தண் + நீர் = தண்ணீர்; தன் + நலம் = தன்னலம். உங்களுடைய தமிழ் வளர்க்கும் ஏட்டிலே இந்நூல் நிறை போன்ற பல நல்ல பகுதிகள் வெளியிட வேண்டும். தமிழ்ச் சொற்பிறப்பியல் , அகர முதலியனவைத் தொகுக்கும் பொறுப்பில் ஈடுபட்டுள்ளவரும் ஒரு நாளின், 24 மணி நேரத்திலும் தமிழையே பற்றி மட்டும் எண்ணும் இயல்பினருமான மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர் தம் தலை மாணவரான பாவலரேறுப் பெருஞ்சித்திரனார், தனித் தமிழ் இதழ்களான தென்மொழி, தமிழ்ச் சிட்டு, தமிழம், வேந்தம், வலம்புரி, கைகாட்டி, இளம்பரிதி போன்றவை பற்றியும், தமிழகத்தில் தமிழிசை ஆய்வு செய்து வரும் பண்ணுய்வறிஞர் ப. சுந்தரேசனார் பற்றியும் செய்திகள் நம் முரசில் வெளியிடல் வேண்டும்..

கிரான்.'.போர்ட்,
ஹவுன்ஸ்லோ, இங்கிலாந்து.

அரங்க முருகையன்.

## முரசு வழிகாட்டுமா?

கார்த்திகைத் திங்கள் லண்டன் முரசு இதழ் கண்டேன். அதிலே சுவையான பகுதியாக நான் எதையுமே காணவில்லை. பெர்னடெட் என் வழிகாட்டி என்ற சிறுகதை ஆரம்பத்தில் நன்றாக இருந்தது. ஆனால் கதை முடிவில் கடவுளைக் கண்டது ஆசிரியர் தன் எழுத்துக்கே முடிவு கண்டது போல இருந்தது. கதைகள் கவிதைகள் எழுதக்கூடியவர்கள் எத்தனையோ பேர் தங்கள் திறமைகளைக் காட்ட வழியற்று இங்கு இருக்கிறார்கள். இவர்களுக்கு லண்டன் முரசு வழி காட்டுமா. லண்டன் முரசு கதைகள் , கவிதைகள், கேள்வி பதில்கள் போன்றவற்றை வெளியிட்டு சிறந்த பத்திரிகையாகி எங்களுக்கு உதவ வேண்டும்.

மேற்கு ஹாம்ஸ்டெட்,
லண்டன் வ.மே.6.

ச.சிவச்செல்வன்

## நல்வழிகாட்டி.

நவம்பர் இதழில் "பெர்னடெட் என் வழிகாட்டி" என்ற கதை படித்தேன். முடிவு நன்றாக இருந்தது. கடவுள் இல்லையென்று கடவுளை மறந்தும் வாழும் ஒரு சிலருக்கு இது நல்ல பாடமாக அமையும். முந்திய இதழ்களில் வந்த சிறுகதைகளை விட இந்தக் கதை தரமானதாக இருந்தது.

திருச்சி–2
தமிழ் நாடு.

பீ.ஜீ.சுகுமார்

[ஆசிரியர் குறிப்பு: கதாசிரியர் தனது கதையின் கீழ் கொடுத்திருந்த குறிப்பில் இக்கதையில் வந்துள்ளது போன்ற அற்புதங்கள் லூர்தில் உண்மையாக நடந்திருப்பதாகக்கட்டுரைகளிலிருந்து அறிந்திருப்பதாகவும் ஆயின் கதையில் வரும் சம்பவங்கள் மட்டும் கற்பனையெனவும் எழுதியிருந்தார் — ஆசிரியர்.]

## நடுநிலை வா(த்)தி யார்.

கார்த்திகை இதழில் வெளிவந்த திரு.சேகரின் கடிதத்தில் ஒரு திருத்தம்.

"தி.மு.க.வின் ஜனநாயகமற்ற சாணக்கியத்திற்கும் இடையில் நடுவு நிலைமை இருக்க முடியும் என்பது வேடிக்கை" என்பதற்கு பதிலாக "தி.மு.க.வின் ஜனநாயகக் கொள்கைக்கும் எம்.ஜி.ஆரின் ஜனநாயகமற்ற சாணக்கியத்திற்குமிடையில் நடுவு நிலைமை இருக்க முடியும் என்பது வேடிக்கை" என்று வாசிக்கவும். தவறுக்கு வருந்துகிறோம்.

—ஆசிரியர்.

**MADRAS INDIA**
**RESTAURANT**

*South Indian Food Speciality*
Open 12 to 3 p.m.
and
6 p.m. to midnight

325 GRAY'S INN ROAD, W.C.1
100 yards from Kings Cross Station

*Speciality:*
IDDLY
VADAI
MASALA DOSAI
SAMBAR
RASAM, etc

Res: 01-837 4544



# BHAVNEETA

## NOVELTIES

EXCLUSIVE **Sarees**

LARGE SELECTION IN CILK, COTTON AND NYLON SAREES. ALSO STAINLESS STEEL KITCHEN UTENCILS AND ALL INDIAN MUSICAL RECORDS.

**4 Tooting High Street**
**London SW17 0RG**

Tooting Broadway Tube
opposite Tooting &
Broadway Markets
Tel. 01 672 4929

**2 Westbury Arcade**
**Westbury Avenue**
**London N22 6BL**

Turnpike Lane Tube
Tel. 01 889 5838

**30 Hampstead Road**
**London NW1 2PH**

Warren Street Tube
Euston Square Tube
Tel. 01 387 0230



# S. W. ENTERPRISE & CO.

**(INSURANCE AND FINANCE BROKERS)**

Let us quote for all your Insurance—

- LIFE
- MORTGAGE PROTECTION
- EQUITY PLAN
- PROPERTY BONDS

House Purchase Mortgage—

- HOUSE PURCHASE MORTGAGE
- Repayment Plan , etc.

Fire and Combined Policy for Business, Shops and House.

Motor Insurance—Competitive quotations having option of 36 Insurance Companies,

Payment of Premiums by instalments—Immediate covers.

You may also pay all your Insurance premium by instalments.

**Please ring for any quotation without obligation.**

Telephone
01-540 2670

**21 MOSSVILLE GARDENS**

**MORDEN, SURREY, SM4 4DG**

# Final Exams

ROYAL COLLEGE OF PHYSICIANS OF THE UNITED KINGDOM. M R C P EXAMS. OCTOBER 1973.
TOTAL PASSED: 214.

| | |
|---|---|
| BALAKRISHNAN, Subramaniam, | M B (Ceylon). |
| GUNARATNAM, Subramaniam, | M B (Ceylon). |
| SUNTHARALINGAM, Murugesu, | M B (Ceylon). |
| VAMADEVAN, Subramaniam, | M B (Ceylon). |
| VIRUPANNAVAR, Chandrashekhar, | M B (Karnatak). |

INSTITUTE OF COST AND MANAGEMENT ACCOUNTANTS. MAY 1973. PART V EXAMINATION.
TOTAL PASSED: 685.

| | | |
|---|---|---|
| ANANDARAJAH, A J (Harlow) | ASIRVATHAM, A J (Mkushi) | BALAKRISHNADAS, T R (Lusaka) |
| MUKUNDAN, K (Bahrain) | NARENTHIRAN, A (London) | PALANINATHAN, V (Ratnapura) |
| RAJALINGAM, N (Dehiwela) | RAJASUNDRAM, B (Brighton) | RANGARAJAN, K (London) |
| SRIKANTHA, S (Glasgow) | SORNALINGAM, T (Colombo) | SUBRAMANIAM, N (Ganaur) |
| VELAYUTHEN, M R (Colombo) | VENKITESWARAN, S (London) | VISVANATHAN, S (Colombo) |

SUBRAMANIAM, S (Kuala Lumpur) (Part IV & V)


**ASIAN FINE ARTS**

ஆசிய நுண்கலை நிறுவனம் இந்தியாவிலிருந்து
கீழ்க் காணும் பொருட்களை இறக்குமதி செய்துதருகிறது.
தமிழ்ப் புத்தகங்கள், வெண்கல எவர்சில்வர் பொருட்கள்,
அணிமணி பொருட்கள் (காஞ்சிபுரம் பட்டு இத்யாதி.)
விபரத்திற்கும் ஆணை இடுதற்கும் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு
கொள்ளவும்.

Asian Fine Arts
57 Milton Road
Croydon
Surrey

TELEPHONE : 01- 684 1739

**Teasdale (BROS) SIGNS**
01 : 542 7035 & 7764

முகப்புக்கள், அட்டைகள், வாகனங்கள்
இவற்றில் சிறந்த முறையில் விளம்பரங்கள்
எழுதுமிடம்.

FOR FACIAS, BANNERS, VEHICLES
& ALL TYPES OF HANDWRITTEN SIGNS
247 KINGSTON ROAD, LONDON SW19 3NW

**CURRY INN**

233 HAYDONS ROAD, WIMBLEDON, LONDON, S.W.19.
TELEPHONE: 01-540 0704
CHOICE READY-COOKED INDIAN FOODS TO TAKE AWAY
OPEN FROM: 12 NOON to 2 p.m. and 5 p.m. to 11.30 p.m.
CAR PARKING ALWAYS AVAILABLE

# NEWSGRAM

## FOURTH INTERNATIONAL TAMIL RESEARCH CONFERENCE IN JAFFNA

The Fourth International Tamil Research Conference will be held in Jaffna commencing from 3rd January 1974 and ending on the 9th of January. The earlier Tamil Conferences were held in Kuala Lumpur(1966), Madras(1968), Paris(1970). Over hundred Tamil research scholars from all over the world will be participating in the Conference. Dr.P.Kumaresan (President, New York Tamil Sangam) Prof.Marr, (University of London), Prof Asher (Edinburgh University) are among those expected to participate from U.S.A and U.K.

## FIJI TAMIL LEADER'S TRIP TO TAMILNADU

Mr K A Appapillai, the prominent Tamil Leader of Fiji and President of the Suddha Sanmarga Sangam and the Publisher and Editor of the Fijian Tamil journal " Mithiran " will be touring in Tamilnadu this month. Mr Pillai was responsible for the awakening of interest in Tamil in Fiji. He will be participating in the centenary anniversary celebration of the late Arudjothi Ramalinga Adigal at Vadalur. Whilst in Tamilnadu he will be enlisting the support of the Tamils and the Political Leaders of Tamilnadu and of the Madathipathis for the development of Tamil in Fiji .

## NEW HIGH COMMISSIONER FOR INDIA IN U.K.

The new High Commissioner for India to Britain, Mr B K Nehru, presented his credentials to the Queen last month. Mr Nehru joined the Indian Civil Service in 1934. He was Minister, Embassy of India, Washington 1949-54. Secretary Ministry of Finance in 1957. He became Ambassador to U S A in 1961-68. Till now he was Governor of Assam, Nagaland, Manipur and Tripura.

## BRITISH GIRL FINDS PEACE AT KATHIRKAMUM, CEYLON.

An English girl from Surrey, Susan Carol Bernard, is studying Yoga at an Ashramum in Kathirkamam. She says that as soon as she sat foot in the precincts of the Temble her worries all disappeared and brought her mental peace. At Kathirkamam, she said, she felt like a child sleeping comfortably in the embracing arms of a mother. As soon as one feds "I am the soul" then he begins to know himself; one is able to feel this in the environment of Kathirkamam. She says her Guru explained to her "Lord Muruga is our soul; as we bring the image of Beautiful Murugan in our minds eye we get this sensation".

## CONTAINERISED CARGO SHIPMENT FROM SRI LANKA.

The Central Freight Bureau of Sri Lanka and the A P L the shipping company will operate twice a month vessels carrying containerised cargo between parts in Sri Lanka, the U S and Far East. The A P L will be the owner of the containers and the equipment but the Port Authorities will utilise to service all the A P L vessels that call to lift the containerised cargo about 70 large containers and equipments are now lying at Queen Elizabeth quay in the port of Colombo.

## NEWS IN BRIEF

X X Mr V Alagacone the founder member and a prominent leader of the Ceylon Federal Party expired on 25th November. He was elected member for Mannar in 1946 and continued in the same seat till his death He was elected in 1956 as a Federal Party member.

X X The Chief Minister of Pondicherry Mr Farouk Mariccar stated that he has no intention of joining the Indira Congress. He was refuting the statements made in the journals that his trip to Delhi must have been with a view to changing his party affiliation. He met the Prime Minister and the Finance Minister.

X X The Income ceiling and compulsory Saving provisions in force in Ceylon will not be applicable to alien citizens and those persons with temporary residence permits. Ceylonese citizens should not spend more than Rs 2,000 a month.

X X Seth Govind Das, the grand old man of Indian Parliament completed 50 years of his uninterrupted membership of the Central Legislature .This is a historic record all over the world.Even Winston Churchill had wo breaks in his political career . He is 77 this month.He was elected in 1923 along with Pandit Motilal Nehru, Mohamed Ali Jinnah and Pandit Malaviya.

X X The number of Commonwealth immigrants to U.K. from January to September this year is 41% less than the same period last year. This is due to the Immigration Act 1971. The number of immigrants is 20,259.

X X The Mother of Aurobinda Ashram in Pondicherry died of heart failure at her 96th year. Her remains was interred in Samathi by the side of Saint Aurobind Samathi. The Government declared the day of her death as a holiday.

X X The Central Advisory Councils attached to the Department of the Inland Revenue and Chief valuer in Ceylon are doing important work by bringing workers participation in management, so says the Minister of Finance.


எமது கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள்

தவிர்க்க முடியாத காரணங்களால் "பட்டிக்காடா பட்டணமா" சென்ற மாதம் திரைக்கு வராததையிட்டு வருந்துகிறோம். 1974ம் அண்டில் இலங்கை நட்புறவு சமூகக் கழகம் சிறந்த தமிழ் திரையோவியங்களை அளிக்கவிருக்கிறது என்பதனை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இலங்கை நட்புறவு சமூகக் கழகம்

வழங்கும்

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஜெயலலிதா மனோரமா சுபா

நடிக்கும்

வெள்ளி விழாச் சித்திரம்



சீட்டுக்கள் :
P Srinivasan
4 Francinia Rd
London S W 4.

A Joachem 01-701 5557
S Thanam 01-579 3029
V A S U 01-519 7707

காலம் :
ஞாயிறு
12 30 பி.ப.

DECEMBER 30

இடம் :
A B C CINEMA
Hammersmith Broadway
London W 6
Tube: Hammersmith.

பட்டிக்காடா பட்டணமா

1974ன் வெளியீடுகளில் சில :

சித்ராலயா அளிக்கும்

ஸ்ரீதரின்

வண்ணப் படங்கள் :
உத்தரவின்றி உள்ளே வா
அவளுக்கென்று ஓர் மனம்

بسم الله الرحمن الرحيم

தமிழ் முஸ்லிம்கள் தங்க வசதியான இடம்



பரிசுத்த க்ஃபாவின் பக்கம்

செய்யித் அப்துல்ரஹ்மான் ஹாஷிம் ஷெல்லி

முஹல்லிம் - மதராஸ் - மைசூர்

மிஸ்பலாஹ் - பரிசுத்த மக்கா சவூதி அரேபியா

BOON TO TAMIL SPEAKING MUSLIMS

THE PLACE FOR COMFORT

THE PLACE FOR LODGING & BOARDING THE PLACE NEAR TO HOLY KAHBA

SAIED ABDURRAHMAN HASHEM SHELLY, MOA LLEM MADRAS & MYSORE

MISFA LAH HOLY MECCA SAUDI ARABIA. TELEGRAM: 'SHELLY'

space donated by JAMAL MOHIDEEN, 7 WOODFALL ROAD-LONDON N4 3JD.

Telephones: 01 263 1718( 2 lines) 01 272 8317

CABLE: "MOGYDENG" London N4

# CLASSIFIED ADVERTISEMENTS

**RATES: 25p per line, Average 5 Words. Box No. 5p extra. Minimum 50p. Prepayment essential.**

## Matrimonial

QUALIFIED LADY DOCTOR,UK,(JAFFNA HINDU VELLALA) SEEKS ACCOUNTANT, DOCTOR-ABOVE 33, GOOD CHARACTER. BOX NO 60.

PROFESSIONALLY LONDON QUALIFIED INDIAN LADY 24 YRS SEEKS YOUNG EDUCATED BRIDE GROOM FROM MALAYSIA. BOX NO 61.

METALLURGICAL ENGINEER(27)FROM CANADA (BHARATHWAJA-IYER)SEEKS FAIR, GOODLOOK ING WELL EDUCATED,HOME LOVING, TALENTED BRIDE(23) BOX NO 59 c/o LONDON MURASU

## Marriages

S KANAGASABAPATHIPILLAI(HOUNSLOW,MIDDLE SEX) SON OF MR & MRS SUPPIAH(ANALAITIVU MARRIED LALITHA, DAUGHTER OF MR & MRS. THALAYASINGHAM(KAYTS,CEYLON) ACCORDING TO HINDU RITES IN JAFFNA,CEYLON.

## Births

BABY SON TO MR & MRS LINGANAYAGAM,ST. ALBANS,HERTFORDSHIRE.

BABY SON TO MR & MRS T VELUPPILLAI , HAMILTON, LANARKSHIRE.

## Films

CEYLON FRIENDLY SOCIAL CLUB PRESENTS TO MEMBERS & GUESTS: PATTIKKADAA PATTINAMAA AT A B C CINEMA,HAMMERSMITH BROADWAY , LONDON W 6. SUNDAY DEC 30th , 12.30P.M.- TICKETS:JOACHEM 701 5557;VASU 519 7707 ; THANAM 579 3029.

## Educational

CARNATIC MUSIC CLASSES(VOCAL)IN WIMBLE--DON,LONDON S W 19.PLEASE CONTACT: MRS. JANAKI VENKATESWARAN, 29 STRATHEARN ROAD, LONDON S W 19.

MALAYALAM CLASSES - EVERY SUNDAY FROM 1.00 P.M. CONTACT: MRS SUMATHI RAVEEND-RAN,B.A.,B.ED., 20 SOUTHEND ROAD , EAST HAM,LONDON E 16.-FREE TUTION.

## Music

NEW RELEASE - THE SONGS OF INDIA.RECORD BY SURYAKUMARI.£2.15 EACH.CONTACT:INDIA PERFORMING ARTS 54 KENSINGTON COURT , LONDON W8 5DF.

## Sarees

GENUINE KANCHEEPURAM SAREES FROM MADRAS AVAILABLE IN LONDON. RING: 01-644 0623, 01- 644 0624

## Restaurants

MEET YOUR FRIENDS AT SREE KRISHNA! - THE MEETING CENTRE FOR THE TAMILS OF LONDON. COME TO SREE KRISHNA SOUTH INDIA RESTAURANT FOR DELICIOUS IDDLY , DOSAI, VADAI, SAMBAR, BEEDA ETC! SREE KRISHNA, 194 TOOTING HIGH STREET , TOOTING,LONDON S W 17

## Indian Groceries

FOR INDIAN HANDLOOM SAREES & INDIAN GROCERIES CONTACT: ALYMARECAR OF VETEMENTS EXOTIQUES, NO 3 BOIS DU TEMPLE-APP 5052, CLICHY SOUS BOIS.

## Socials

UNITED MONTHLY SERVICE IN TAMIL - SPECIAL X'MAS SERVICE AT THE METHODIST CHURCH, GWENDOLEN AVENUE,PUTNEY,LONDON. S,W.15. SUNDAY, DECEMBER 23rd,4.00P.M.

X'MAS CAROL SERVICE- BY THE CEYLON PENTECOSTAL MISSION AT THE CORONATION HALL, ASHCOMBE ROAD,WIMBLEDON, LONDON S W 19 ON SUNDAY, DECEMBER 16th AT 5.00

FANCY DRESS & DINNER DANCE BY THE ASSO CIATION OF CEYLONESE IN U.K. AT THE CHENIL GALLERIES,KINGS ROAD, CHELSEA, LONDON S W 1 SAT 29th DEC 7.30P.M. TO 11.30P.M. TICKETS: £1.30(INCL DINNER ) PHONE: VICTOR KASINATHAN 01-204 1911.

JOIN THE TAMIL SANGAM - NEW YORK! FOR MEMBERSHIP DETAILS PHONE: SEKHAR .J. HENRY (SECRETARY) 212 - 426 - 1927.

## Services

FOR QUALITY PHOTOGRAPHS DURING WEDDINGS AND OTHER FUNCTIONS CONTACT:ARUN KUMAR ROY , 48 GEARY ROAD, LONDON N W 10 1HH, TEL: 01 - 452 3695.

## LONDON MURASU

SEND A GIFT SUBSCRIPTION TO YOUR RELA-TIVE, FRIEND,SCHOOL LIBRARY OR LOCAL LIBRARY. SUBSCRIPTIONS TO INDIA,CEYLON, MALAYSIA,SINGAPORE,SOUTH AFRICA,MAURI--TIUS & FIJI: AIR MAIL £2.75; SEA MAIL £1.80; PLEASE SEND WITH SENDERS DETAILS & CHEQUE/P.O TO LONDON MURASU.

ANNUAL SUBSCRIPTION(12 ISSUES) INCL. POSTAGE: U.K -£1-80p;FRANCE - 25Fr ; U.S.A & CANADA - $6-00; SEND SUBS. BY P.O/M.O/CHEQUE TO: LONDON MURASU , 8 ASHEN GROVE, LONDON S W 19 8BN.

Printed and Puolished by S. Sabapathipillai, M.A., L.L.B.(Lond.), F.R.A.S., F.T.I.I., Bar-at-Law.

for London Murasu Pirasuram, 8 Ashen Grove, London, SW19 8BN.

# For Sarees Visit

# SAREE BOUTIQUE

(IMPEX ENTERPRISES)



**E 3, 4, 5 & 6,**
**THE BROADWAY MARKET,**
**TOOTING BROADWAY**
**LONDON SW17** Tel: 01-672 6537

One minute from Tooting Broadway Station, just behind Marks & Spencer.

LATEST SPECIALITY

NYLON NYLEX 630, 640, 644, and 680.
NYLON NYLEX PLAIN and PRINTED.
FRENCH CHIFFON, WOOLLEY GEORGETTE, SILK SAREES, EMBROIDERY SAREES,
LUREX SAREES, CASHMERE SAREES, KANJIVARAM, HAKOBA, etc., etc.

*WIDE SELECTION OF TAMIL AND HINDI RECORDS — AT VERY COMPETITIVE PRICES!*

*HUGE VARIETY OF INDIAN CHAPPALS IN ALL COLOURS AND DESIGNS.*



ARE YOUR PRINTING PROBLEMS
GETTING YOU DOWN?

THEN LET US MAKE A QUICK MOVE
TOWARDS SOLVING THESE FOR YOU.



Please consult us now for your

Letterheads, Business Cards, Circulars, Invitation Cards, Business Stationery (Invoices, Statements, Quotation forms etc), catalogues and brochures.

We are only a phone call away at either

01-644 0623

or 01-644 0624

# ALAM PRINTING SERVICES

3 & 4 Station Buildings, Gander Green Lane, WEST SUTTON, Surrey.

# லண்டன் முரசு LONDON MURASU


யாதும் ஊரே... யாவரும் கேளிர்.


## HANDLOOM HOUSE



**New Quality Polyester Georgette**

**Plain Dyed & Printed**

ALL THE PRICES ARE GREATLY REDUCED

Plain and Printed Japanese Nylon Sarees in many varieties

Banarshi Silk Sarees, Printed Kashmiri, Tie and Dye Sarees and many other varieties.

243 TOTTENHAM COURT ROAD
LONDON, W1P 9AD
Tel: 01-580 1771
Underground: Tottenham Court Road and Goodge Street.

35 RUPERT STREET
(off Shaftesbury Avenue)
LONDON, W1V 7FS
Tel: 01-437 4658
Underground: Piccadilly Circus.

44 HIGH ROAD, WILLESDEN ROAD
LONDON, NW10 2QA
Tel: 01-459 7910
Underground: Willesden Green.



**Edition mensuelle internationale en Tamoule** Publiée à Londres

**International Tamil Monthly Magazine** Published from London

In London herausgegebene **internationale tamulische Monatsschrift**